1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS," JAFFNA.
phone: No. 100.

# சத்தியவேதபாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு வைகாசி மாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 19-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### அடைக்கலத் திருநாள்

கொழும்புத்துறையிலே கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச். சூசைமுனீந்திரனின் அடைக்கலத் திருநாள் சென்ற 16-ந்திகதி ஞாயிறு வாரம் வழமைபோலப் பக்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. முதனாள் சனிக்கிழமைமாலை வேஸ்பர் பாடிமுடிந்ததும் மரியாயின் புனித வருட ஞாபகார்த்தமாக மாசில்லாத மாதாவின் திருச்சுரூப மெழுகுவர்த்திச்சுற்றுப்பிரகாரம் பக்திப்பரவசமாக நடந்தேறியது. திருநாளன்றுகாலை சுவர்க்கலோகம்போன்று காட்சியளித்துநின்ற சூசைமாதவனின்கோவிலிலே ஆசிரியர்களும், ஆசிரியமாணவர் மாணவிகளும், பிறருமாகத் திரளானோர் குழுமியிருக்க, மேற்றிராசன பரிபாலனரான மிகவண. எச். லெக்குத்தூர்சுவாமியவர்கள் பாடற்பூசை நிறைவேற்றினர். பிற்பகல் 4-30 மணிக்குப் பெருந்திரளானோர் சமுகமளித்திருக்க, மேற்றிராசனபரிபாலன சுவாமியவர்கள் வேஸ்பர்பாடியதன்மேல் பக்தகோடிகள்புடைசூழத் திருவளனார் திவ்வியபாலனைத் திருக்கரத்தேந்தியவராய்ப் பூந்தேர்மீது பவனிசென்று தாபனமைதானத்தில் அனைவருந்தேங்கிநிற்க, அழகியசிம்மாசனத்தெழுந்தருளினர். அவ்வேளை வண. சி. மரியாம்பிள்ளை சுவாமியவர்கள் தேமாரிபொழிந்தவாறாய்ச் சூசைமாதவனின் பெருமையை எடுத்துக்காட்டி அரியதோர் பிரசங்கஞ்செய்தார். அதன்மேல் அடைக்கலப்பிதாவின் திருஅடைக்கலத்தில் மேற்றிராணியார் முதல் விசுவாசிகள்ஈறுகச் சகலரும் ஒப்படைக்கப்பெற்றூர்கள். பின்னர் கோவில்முன்றிலிலே திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பெற்றுத் திருநாள்இனிதே நிறைவாயிற்று.

### பாவற்குள திருத்தவேலை

வவுனியாப்பட்டினத்திற்குத் தென்கிழக்கே பத்துமைல்தூரத்தில் நெல்லுக்குள—நேரியகுள வீதியிலுள்ள பாவற்குளத்தைத் திருத்திப்புதுப்பிக்கும்வேலை ஆரம்பமாகியிருக்கிறது. 75 லட்சம்ரூபாசெலவில் நடைபெற்றுவரும்இந்தவேலை பூர்த்தியாகுமிடத்து, பாவற்குளத்திலிருந்து 4,500 எக்கர் விஸ்தீரணமான காணியை நீர்ப்பாய்ச்சலாம். அங்கு பத்துஎக்கர்நிலத்தில் அமர்த்தப்பட்டிருக்கும் கமத்தொழிற்படையைச்சேர்ந்த 400பேர் நாலு வருடகாலத்தில் 4,500 ஏக்கர்காட்டு நிலத்தைத் துப்புரவுசெய்வார்கள். இதுவரை அவர்கள் 200 ஏக்கர்வரையில் துப்புரவுசெய்துவிட்டார்கள். நீர்ப்பாசனபகுதியின்கீழ் பதின்மூன்றுஒப்பந்தகாரர் பிரதம நீர்ப்பாசன வெட்டுவாய்க்கால்களை அமைப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்தவெட்டுவாய்க்கால்கள் 8மைல்நீளமும், 16 அடி அகலமுமுடையனவாயிருக்கும். துப்புரவு செய்யப்பட்டுள்ள 200 ஏக்கரும் சென்றவருடம் சேனைப்பயிர்கள்செய்யுமாறு இராசேந்திரன்குளம், உல்லுக்குளம், சூடுவெந்தபிலாஆதியாம் கிராமவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டது.

### கிறகோரியாரின் பஞ்சாங்கம்

தற்போது நடைமுறையிலே இருந்துவருகின்ற கிறகோரியாரின் பஞ்சாங்கத்தை மாற்றியமைக்க உத்தேசிப்பதை எதிர்த்து "இலங்கையின் பஞ்சாங்கதிருத்த கம்மிற்றி" யென அறியப்படும் ஸ்தாபனம்ஒன்று உலகபஞ்சாங்க சங்கத்துக்கு ஓர் மனுவை அனுப்பிவைக்க ஆயத்தப்படுகின்றது. "1582-ம் ஆண்டு நடைமுறைக்குவந்த கிறகோரியாரின் பஞ்சாங்கத்திலே மாற்றஞ்செய்வதற்கான பிரேரணைஒன்று தற்போது ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின்முன்பாக வந்திருக்கிறது; இந்தப் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டு, உத்தேசிக்கப்படும் உலகபஞ்சாங்கம் நாட்டிலே புகுத்தப்படுமானல், உலகமுழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு அரசியல், பொருளாதார, சமய சிக்கல்களை உண்டுபண்ணிச் சரித்திரபூர்வமான வார காலசக்கரத்தின் தொடர்ச்சியை இடையிலே குலைப்பதாகும்" என்று இந்தக்கம்மிற்றி தெரிவித்து, உலகபஞ்சாங்க திருத்தசங்கம் கூடுவதற்குமுன்னரே தக்ககாலத்தில் தனது ஆட்சேபனையை அதற்குச் சமர்ப்பிக்க விருக்கின்றது. அதனுல் ஒருலட்சம்பேரின் கைச்சாத்துகளைக் கொண்ட ஓர் ஆட்சேபமனுவை அது தயாரிக்கத்தொடக்கியிருக்கிறது.

### வாரம்ஒன்றுக்கு ஒருயானை

பயிர்பச்சைகளைப் பாதுகாக்கும் நோக்கமாக இலங்கையிலே 1951-ம் ஆண்டில் 54 காட்டுயானைகளும், 1952-ம்ஆண்டில் 39 காட்டுயானைகளும், சென்ற 1953-ம்ஆண்டில் 56 காட்டுயானைகளும் கொல்லப்பட்டிருப்பதாக — அதாவது கடந்தமூன்றுவருடங்களிலும் வாரம்ஒன்றுக்குச் சராசரியாய்ஏறக்குறைய ஒருயானை வீதம் கொல்லப்பட்டிருப்பதாக அரசாங்க காட்டுப்பிராணிகள்பகுதிக் காப்பாளரான திரு. சி. டபிள்யு. நிக்கலஸ்அவர்கள்சென்றவருடத்திற்கான தமதுபரிபாலன அறிக்கையிலே தெரிவித்து, காட்டுயானைகளை இனியாவதுபாதுகாத்துவைக்கும்படியாகக் கேட்டிருக்கின்றூர். கடந்த நூறுவருடங்களுக்கிடையில் காட்டுயானைகளின்தொகை பதினுயிரத்துக்கு மேற்படவிருந்து தற்சமயம் ஆயிரத்துக்கும்குறைந்துவிட்டதாக அவர் கூறுகின்றூர்.

### புலவர் ஞாபகசின்னம்

யாழ்ப்பாணத்திலே பிரபல்யம்பெற்றிருந்து காலஞ்சென்ற நவாலி, ஸ்ரீ சோமசுந்தரப் புலவரவர்களுக்குத் தகுதிவாய்ந்த ஞாபகசின்னம்ஒன்றை நிறுவுதற்கான வழிவகைகள்பற்றி ஆலோசிக்குமாறு சென்ற 17-5-54 திங்கட்கிழமை யாழ்ப்பாண இந்துக்கல்லூரியிலே பாராளுமன்றப்பிரதிநிதியான திரு. வி. வீரசிங்கம்அவர்கள் தலைமையில் ஓர்பகிரங்ககூட்டம்நடந்தேறியது. அதிலே இயன்றமட்டும் கூடியகெதியிலே இந்தநோக்கத்தைப் பூர்த்திசெய்யுமாறு கம்மிற்றிஒன்று ஆக்கப்பட்டுள்ளது. இதுவிஷயமாகத் தமிழ்பேசும் மக்களனைவரும் தங்கள் மனப்பூர்வமான ஆதரவையும், ஒத்துழைப்பையும் அருளுமாறு கேட்கப்பெற்றிருக்கிறூர்கள்.

### எலிசபேத் மகாராணியார்

மாட்சிமைதங்கிய எலிசபேத்மகாராணியார் உலகத்தைச்சுற்றித் தமது ஆறுமாதகால சுற்றுப்பிரயாணத்தையும் முடித்துக்கொண்டு தம்முடைய நாயகருடனும், மத்திய தரைக்கடலிலே தம்முடன்வந்துசேர்ந்துகொண்ட இருபிள்ளைகளுடனும் சென்ற 15-ந் திகதிசனிக்கிழமை சேமமாக இங்கிலாந்துபோய்ச் சேரலாயினர். அவர் தமது சுற்றுப்பிரயாணத்தின்போது ஆகாயத்திலும், கடலிலும், தரையிலுமாக ஐம்பதினுயிரம்மைல்தூரம் பிரயாணஞ்செய்திருக்கின்றூர். ஆறு பாராளுமன்றங்களைத் திறந்துவைத்திருக்கின்றூர். மூன்றுஞாபகசின்னங்களை நிறுவியும், ஓர்வீதியைத்திறந்தும், ஆறுமரக்கன்றுகளை நாட்டியும், ஓர் அணைக்கட்டை ஆரம்பித்தும், ஓர்ஆசனக்கோயிலுக்கு அத்திவாரக்கல் நாட்டியும், கோவில்ஒன்றை அர்ப்பணஞ்செய்தும், கலாசாலைஒன்றைத்திறந்தும், நான்குவானெலிப்பேச்சுகள் நிகழ்த்தியும், மகிமைப்பட்ட சின்னங்கள்அளிக்கும் பதினெருவிழாக்களைநடத்தியுமிருக்கின்றூர். 50 அரசாங்கநடனங்கள், தோட்டோபசாரணைகள், விருந்துகளுக்குச் சமுகமளித்தும், 135 பொதுவரவேற்புகள், வெகுமானங்கள் அருளப்பெற்றுமிருக்கின்றூர். ஆனுல், அவர் பிறருடன்எத்தனைமுறை கைகுலுக்கினுரென்பதை எவருமேஅறியமாட்டார்கள்.

### பதினெரு வாக்காளர்

பதுளையைச்சேர்ந்த கந்தப்பலாக் கிராமச்சங்கத்து எட்டாம்வட்டாரம் பதிவுசெய்த 5 வாக்காளரையும், ஒன்பதாம்வட்டாரம் 6 வாக்காளரையுமே கொண்டுள்ளன. சமீபத்தில்நடந்த தேர்தலிலே 8-ம்வட்டாரத்துக்கு திரு. டபிள்யு. எம். அப்புஹாமி, திரு. ஆர். வி. டேவிட்சில்வாஎனும் இருவர் அபேட்சகர்களாக முன்வந்தனர். ஐந்து வாக்காளரிலும் நாலுபேரேசென்று சம்மதிச்சீட்டுப்போட்டபோது, ஒவ்வொருவருக்கும் தனித்தனிஇரண்டு சீட்டுகள் சமமாகக்கிடைத்தன. அதனுல், நாணயம்ஒன்றைப் போட்டுப் பார்த்தவிடத்து அப்புஹாமிக்கே வெற்றிகிடைத்தது. அதனுல்அவரேகிராமச்சங்க அங்கத்தவராயினர். இந்தவட்டாரத்திலுள்ள குடும்பங்கள்இரண்டு மாத்திரமே. முந்தியதேர்தலின்போது அதில்பதினெருவாக்காளர் இருந்தார்கள்.

### கல்மடுக்குளத் திருத்தம்

மன்னூர்ப்பகுதியிலே இரணை—இலுப்பைக் குளத்திலிருந்து வவுனியாவிற்குச்செல்லும் பாதையிலுள்ளதும், தூர்ந்துபோயிருப்பதுமான கல்மடுக்குளம் தற்போது நீர்ப்பாசனபகுதியாரால் திருத்தப்பட்டுவருகிறது. இது திருத்தப்பட்டதும் அதனைச்சூழவுள்ள 300ஏக்கர்விஸ்தீரணமான காணியை நீர்ப்பாய்ச்சலாமெனக் கருதப்படுகிறது. அப்போது மன்னூர், மாந்தை, முசலி ஆதியாம் இடங்களிலிருந்து போய்க்குடியேறவிரும்புகிறவர்களுக்கு அந்தக்காணி பங்கீடுசெய்து கொடுக்கப்படுமெனத் தெரியவருகிறது.

### விஞ்ஞானமும் சுவபாஷாஆசிரியரும்

சுவபாஷாஆசிரியர்கள் தேசிய பாஷைகளிலே பொதுவிஞ்ஞானம் படிப்பிப்பதற்கென்று சமீபத்திலே பயிற்றப்படவிருக்கின்றூர்கள். விஞ்ஞானத்திலே தராதரப்பத்திரம்பெறவிரும்புகின்ற சுவபாஷாஆசிரியர்களுக்கென சனிவாரவகுப்புகள் நடத்த வித்தியாதிபதி திரு. ரி. டி. ஜயசூரியஅவர்கள் தீர்மானித்திருக்கின்றூர். இந்தவகுப்புகள் ரசாயனசாலைகள்இருப்பனவும், போதகாசிரியர்கள் கிடைக்கக்கூடியனவுமான அரசாங்க மத்தியகலாசாலைகளிலும், பிரதமகலாசாலைகளிலும் குறைந்தபட்சம் இருமணித்தியாலம் நடத்தப்படும். வருடமுடிவிலே விஞ்ஞானப்பயிற்சிபெறும் ஆசிரியர்கள் பரீட்சிக்கப்பெற்றுத் தேர்ச்சித்தராதரப்பத்திரம் அருளப்படுவார்கள். 1957-ம் ஆண்டுமுதல் 6-ம் 7-ம் 8-ம் வகுப்புகளில் தேசியபாஷைகளிலே பொதுவிஞ்ஞானசாஸ்திரம் படிப்பிக்கப்படவேண்டியதாகும். தேசிய பாஷைகளிலே விஞ்ஞானவகுப்புகள் நடத்துதற்குப்போதிய சுவபாஷா ஆசிரியர்கள் இல்லாமையாலேயே இந்தப்பயிற்சித்திட்டம் வகுக்கப்படுகிறது.

### பாம்புக்கடிக்கு முதற்சிகிச்சை

காலங்கண்ட ஓர்வைத்தியரான டக்றர் சி. தாமோதரம்பிள்ளைஅவர்கள் சங்கானையிலே ஓர்வைத்தியசாலை நடத்திவருகின்றூர். ஆங்கிலவைத்தியத்தில் திறமைவாய்ந்துள்ள இவர் பாம்புக்கடி வைத்தியத்திலும் ஓர்சிறந்த நிபுணராவர். இவர் பாம்புகடித்ததும் செய்யவேண்டிய ஆரம்பசிகிச்சையைப்பற்றித் தெரிவித்திருப்பதுவருமாறு: பாம்பு கடித்ததும் கடித்தஇடத்தை மிகவும் கூர்மையான கத்திஒன்றினுல் வெட்டி அந்தஇடத்திலுள்ள நஞ்சுகலந்த இரத்தத்தை வெளியேஎடுத்து விடவேண்டும். அதன்மேல்தான் பாம்புகடித்த ஆளை வைத்தியசாலைக்கோ, அல்லது ஆஸ்பத்திரிக்கோ கொண்டுசெல்லவேண்டும். பாம்புகடித்த இடத்திலுள்ள நஞ்சுகலந்த இரத்தத்தை வாயால் உறிஞ்சக்கூடாது; ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் கூர்மையான ஓர்வில்லுக்கத்தியை வைத்திருக்கவேண்டுமென்று அவர் ஆலோசனை கூறுகின்றூர்.

### ருஷியாவின்உதவி தேவையில்லை

நிதிமந்திரியின் பாராளுமன்ற காரியதரிசியான திரு. எச். டி. எச். ஜயவர்த்தனஅவர்கள் சென்ற 16-ந் திகதி பிபிலியில்நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசியபோது: எங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கும், எங்கள் பொருள்வளங்களை விருத்திசெய்வதற்கும் ருஷியாவின்உதவி எங்களுக்குத் தேவையில்லை; நீங்கள் உங்களுடைய உழைப்பில் ஒருபகுதியை மிச்சம் பிடித்துக் கொள்ளவேண்டும்; நீங்கள் அரசாங்கத்துக்கு உதவிசெய்யுங்கள்; அதற்குப்பதிலாக உங்களுக்கு அரசாங்கம் உதவிசெய்யும்; சென்றவருடம் அரசாங்கம் சேமிப்பு இயக்கத்தினிடமிருந்து 2 கோடியே 10 லட்சம் ரூபா கடன்எடுத்தது; இப்பணம் ஏழைமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக உபயோகிக்கப்பட்டதெனக் கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுக்குண்டு எந்தமூலே?

(வண. காந்திசுவாமிகள்)

"மனிதன் அணுக்குண்டுச் சக்தியைக் கண்டுபிடித்திருக்கிறான். அவன் இஷ்டப்பட்டால் போதும், தான்சீவிக்கிற உலகத்தையே அழித்துவிடலாம்." விஞ்ஞானிகள் சமீபத்தில் சொன்ன பயங்கரமொழிகள் இவை. ஆகவே, மனுக்குலம் தன்னையே அழித்துக்கொள்ளும் நாசசக்தியைக் கொண்டுள்ளது. ஆ! நாம் நம்மையே தற்கொலை செய்துகொள்ளத் தீவிரித்துக் கொண்டிருக்கிறோமே!

இப்பயங்கர அழிவுச்சக்திக்குச் சின்னப்பரின் மொழிகள் அறைகூவலாக இருக்கும். "தேவவார்த்தை உயிருள்ளது; சக்திநிறைந்தது; இருபக்கம் கூர்வாளைவிடக் கூர்மையானது" என்று சின்னப்பர் சம்காலத்திற்கேற்ப, நம்காலத்துமொழியில் மொழிந்தார். இருபக்கமும் கூர்மையானவாள் அக்காலத்தில் பயங்கர ஆயுதம். (அவர்கள் அதிர்ஷ்டசாலிகளே!) அதே சின்னப்பர் இப்பொழுது நமது காலத்தில் பேசுவதாக இருந்தால் என்ன சொல்லுவார்? தேவவார்த்தை அணுக்குண்டு ஆயுதத்தைவிடச் சக்திவாய்ந்தது என்றுதான் சொல்வார். அமெரிக்க, ருஷிய அணுக்குண்டு உற்பத்திச்சாலைகளிலுள்ள சக்தியைக்காட்டிலும் தேவவார்த்தையிலே மகாசக்தியுள்ளது.

அப்பொழுது இருந்ததைவிட, இப்பொழுது தேவனின் அபாய அறிவிப்பை மனுக்குலம் கவனிக்க வேண்டும். "நான் உங்களுக்கு வாழ்வையும், மரணத்தையும், ஆசீரையும், சாபத்தையும்தந்திருக்கிறேன்." மனிதன் வேண்டுமானால் மரணத்தைத் தெரிந்தெடுக்கலாம். அவனதுகரங்களிலே அசுர ஆயுதம் இருக்கிறது. அதைக்கொண்டு அவன் செகத்தையே சின்னபின்னமாக்கக்கூடும். அவன் வாழ்வைத் தெரிந்தெடுக்கலாம். இன்றைய புதுச்சக்திகளைத் தனது நன்மைக்காகப் பயன்படுத்தலாம். வாழ்வடையவழி தேவவார்த்தைக்குக் கீழ்ப்படிவாகும்.

உன்சந்ததியும், நீயும் உயர்வடைய வாழ்வைத் தெரிந்தெடு. கர்த்தரை நேசித்து அவரது குரலுக்குச் செவிசாய். ஏனெனில், அவரே உனது சீவன்.

தேவவார்த்தையை எங்கே தேடுவது? மனிதசரீரம்எடுத்து நம்மைஇரட்சித்த வார்த்தையானவரின் குரலொலியைச் சுவிசேஷத்தில்தவிர வேறுஎங்கே தேடுவது?

தினமும்தான் படிக்கிறோம் பத்திரிகைகளிலே உலகத்தின் அவதிநிலையை. குரோதம், சுயநலம்படைத்த நாடுகள் ஒற்றுமைப்படாமல் சமாதானத்தைக் குலைக்கின்றன; மனுக்குலத்தையே சுயஅழிவுவழிக்கு உட்படுத்துகின்றனஎன்று பத்திரிகைவாயிலாகப் படிக்கிறோம்.

சிறிதுபொழுதுபோக்கு நேரமிருந்தால் சமயா சமயத்தில் படிக்கிறோம் சுவிசேஷத்தை. அன்பு, பரித்தியாகமே நித்தியசீவியத்தைப்பெறும் வழியென்று சுவிசேஷம் நமக்குக் காட்டுகின்றது. மலைப் பிரசங்கம், இராப்போசனபிரசங்கம் இவற்றையெல்லாம் நாம் கவனத்தோடு படிக்கிறோமா? "ஏழைகள் பாக்கியவான்கள், சாந்தமுள்ளவர்கள்பாக்கியவான்கள்.. எதைஉண்போம், எதைஉடுப்போம் என்று வீண் கவலைகொள்ள வேண்டாம்.... நீங்கள் சிறியவர்களுக்குச்செய்தது எனக்கே செய்ததாகும். மனுமகன் ஊழியம்பெறுவதற்கல்ல, செய்வதற்கே வந்தார்.... நான் உங்களை நேசித்ததுபோல நீங்கள்ஒருவர் ஒருவரை நேசியுங்கள் ....." இந்த அறிவுரைகளிலே உள்ளத்தைச் சீரமைக்கக்கூடிய சக்தி மறைந்திருக்கிறது. உள்ளபடி சுவிசேஷத்தின் ஒவ்வொருவரியும் ஆத்மீகசக்தி அளிக்கக்கூடியது.

செகத்தை அழிக்கவல்ல அணுக்குண்டுச்சக்தியின் சுவிற்சை அழுத்திவிடும் அசுரதளகர்த்தனை நினைக்கும்பொழுது நமதுமனம் பகீரென்கிறது. அதிகசக்திவாய்ந்த ஆயுதம் நம்கையிலே இருக்கிறது. இந்த ஆயுதம் அழிவுக்காகவல்ல, உயிருக்குஉலைவைப்பதற்காக அல்ல, சமாதானமும், சீவியமும் தருவதற்காகவே. எவன் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறானே, எவன் யேசுவின் குரல்ஒலிக்கு உண்மையாகவே செவிசாய்க்கிறானே, அவன் உலகத்தை மாற்றலாம். நாமே அந்தமனிதனாக இருக்கலாம். இருக்கவும் வேண்டும்.

## தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

### களிகூர்ந்தகாரணிக்கம்

**4-ம் காரணிக்கம் — 9-ம் பிரியதத்தம்**

**39. "ஒருவாள் ஊடுருவும்"**

தனது திருக்குமாரன் பின்னாற் படவிருக்கும் கஸ்திதுன்பங்களையெல்லாம் தேவதாய் அறிந்திருந்தாள். காலத்துக்குக்காலம் உதித்த தீர்க்கதரிசிகள் உரைத்த தீர்க்கதரிசனங்களிலிருந்து இரட்சகர்படவிருக்கும் பாடுகளை அவள் தெரிந்துகொள்ளக் கூடியதாயிருந்தது. அங்ஙனமாக, தேவதாய் ஆராய்ந்து ஊகித்து அறிந்துகொண்டதான அவ்விரகசியத்தையே அவள் இன்னமும் நன்றாய்த் தெளிந்துகொள்ள வேண்டுமென்றாற்போலச் சிமியோன்முனிவரைக் கடைசித்தீர்க்கதரிசியாய் ஆண்டவர் அனுப்பிவைத்தார்போலும்!

"இவரே புறச்சாதிகளுக்குப் பிரகாசிக்கின்ற ஒளி, உமது சனமாகிய இசிறவேலருக்கு மகிமை" எனச் சிமியோன் திவ்வியபாலகனைக் குறித்து வசனித்தான்றே! அதைக்கேட்ட சூசைமாதவனும் தேவதாயாரும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தவேளை சிமியோன் அவர்கள் இருவரையும் ஆசீர்வதித்துத் தாயாகிய மரியம்மாளைநோக்கி ......

"திருக்கிளர் இன்ன தோன்றல்
சிலர்க்குயிர் சிலர்க்குக் கேடாய்

தெய்வஅழகோடு விளங்கும் இத்தேவகுமாரன் சிலபேருக்கு உயிராகவும், சிலபேருக்குக் கெடுதியாகவுமிருந்து,

"செருக்கிளர் பகைவர் ஏவும்
சினக்கணைக் குறிஎன்(று) ஆவான்

மிக்க அகங்காரம்கொண்ட சத்துருக்கள்எய்யும் கோபமாகிய அம்புகளுக்குக் குறிபோலாகி வருந்துவான். அப்போது ......

"உருக்கிளர் நெஞ்சம் போழ்தற்(கு)
உறுகண்வாள் உருவப் பாய்ந்து
தருக்கிளர் தருமதாயே தளர்ந்(து)
இடர் குளிப்பாய் என்றான்"

"பெருமையோடு விளங்கும் உன் திருவுள்ளத்தை அறுப்பதற்குத் துன்பமென்னும் ஒருவாளாயுதம் பாய்ந்து உருவ, அதனால் சோர்வடைந்து துன்பசாகரத்தில் முழுகிவருந்துவாய்" என்றான்.

அங்ஙனம் சிமியோன்உரைத்த பயங்கரமொழிகளைத் தேவதாயாரும், சூசையப்பரும் செவிவிழுத்தி நிற்கின்றனர். அச்சொல்லாகிய வாளினால் அவர்கள் தங்கள்செவிகள்முதல் நெஞ்சும் உயிரும் அறுக்கப்பட்டதுபோல வருந்தா நிற்கின்றனர். பாவங்களைத் தீர்த்திரட்சிக்கும்படி பூமியில் அவதரித்துப் பிறந்த தேவகுமாரன் இரத்தஞ்சிந்தி இறப்பான்என்பதை அத்தீர்க்கதரிசன வார்த்தைகளால் தெரிந்துகொள்ளுகின்றனர். அதனால் பெரிதும் துன்பசாகரத்தில் மூழ்குகிறார்கள். அவர்கள் இருவரும் அனுபவித்த துயரை:

"என்றன கடுஞ்சொல் வாளால்
இருசெவி முதலீர்த் தங்கண்
நின்றன இருவர் நோக
நிலத்திலெம் வினைகள் தீர்ப்பச்
சென்றன நாதன் தன்துய்
செம்புனற் சிந்தி மாள்வான்
பின்றென உளத்தி லோர்ந்தார்
பீடைநீண் புணரி தாழ்ந்தே"

என்று முனிவர் அழகாகவிளக்குகிறார்.

முப்பத்துமூன்று வருடங்களுக்குப்பின் நடைபெறவிருக்கின்ற பயங்கர காட்சியையே அன்றுசிமியோன் மாதாவுக்குத் தீர்க்கதரிசனமாகக் கூறினார். மாமிசஐக்கியமாகிய பரமஇரகசியத்திலே தேவதாய் தொடர்பூண்டதுபோலலே இரட்சிப்பிலும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்பது ஆண்டவரின் திருச்சித்தமாயிருந்தது. சிலுவையிலே பலியாக ஒப்புக்கொடுக்கப்போகும் பரிதாப காட்சியையும் காணவேண்டியதான கசப்பானகாரியமும் அவளதுபெருங்கடனாக இருந்தது.

தனதுதிருக்குமாரனை மக்கள்பகைத்தும், நிந்தித்தும், பரிகாசம்செய்தும், அடித்தும், முண்முடிசூட்டியும், சிலுவைசுமப்பித்தும் வருத்திய வருத்தங்களைஎல்லாம் கூடவேஇருந்து காணவேண்டியவளானாள். அதுவுமன்றி மாசற்றசெம்மறிப்புருவையான தனது திருக்குமாரனைக் கள்ளனைப்போலக் கள்வர்மத்தியிலே சிலுவையிலேஉயர்த்தி வருத்திய கோரக்காட்சியையும் உடனிருந்து காணவேண்டியவளானாள். இவற்றையெல்லாம் அவள் ஒருவாறு சகித்தாலும் தனதுதிருக்குமாரன் சிந்தும் திருஇரத்தம் வீணாய்ப்போவதைக் காணும்போது அவள் ஆத்துமத்தை வியாகுலவாள் ஊடுருவாதுவிடுமா?

இத்தகைய பயங்கரமான தீர்க்கதரிசனவார்த்தையைச் சிமியோன் உரைத்தபோது,

"..................................
தேன்நில முகையின் நின்ற
திருநர தேவன் கேட்டுக்
கான்நில முகைவிண் டன்ன
கனிந்த புன்முறுவல் கொட்டி
மீன்நில சென்னி சாய்த்து
விழைந்ததற் கமைந்தான் மன்னோ"

தேனுக்கிடமான பூவரும்பின் சாயலாய் அங்கிருந்த திவ்வியபாலகனும் அதைக் கேட்டுநின்றார். வாசனைக்கிடமான பூவரும்பு மலர்ந்தாற்போலத் தன்திருவாய்மலர்ந்து அன்புள்ள ஒரு புன்னகை பூத்துநிற்கின்றார். பிரகாசத்துக்கிடமான தன்சிரசைச்சாய்த்து நமக்காக ஆசையோடிறப்பதற்கேற்ற தன்மையைக் காட்டிநிற்கின்றார்.

## நாளு சங்கதிகள்

— செக்கோசிலவாகியநாட்டுக் கம்யூனிஸ்தர்களாலே இற்றைக்கு மூன்று வருடங்களின்முன் கைது செய்யப்பெற்ற பிறேக்நகர் அதிமேற்றிராணியாரான பிறன்ஆண்டவர் அந்நகரிலிருந்து 20 மைல்தூரத்திலுள்ள கோலின்எனுமிடத்திலே மற்றும் 15 குருமாருடன் சிறைச்சாலையாக மாற்றப்பட்ட ஓர்வீட்டில் சிறைவைக்கப்பட்டிருக்கிறாரென மூனிச்நகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.

— ஜோர்தான்நாட்டின் கிழக்கு-மேற்குப் பகுதிகளிலுள்ள அராபிய அகதிகளுக்கென்று 4,000 பெட்டி பாற்கட்டியையும், இரண்டாயிரம் பீப்பா பொடிசெய்த பாலாகாரத்தையும் பரிசுத்தபாப்பரசர் இலவசமாக அனுப்பிவைத்திருக்கின்றார். பாலாகாரம 110 தொன்நிறையும், 26,600 பவுண் பெறுமதியுமுடையது. 161 தொன் நிறைகொண்ட பாற்கட்டி 44,800 பவுண் விலைமதிப்புடையது.

— உலகில் சோவியற்ருஷியாவின் ஆகாயப்படையே மகாப்பெரியதென்றும், அமெரிக்க ஆகாயப்படை, தரைப்படை, கடற்படை, கரைப்படைகளிலுள்ள விமானங்களை ஒன்றுசேர்த்தாலும் அதிலும்பார்க்க ஆயிரக்கணக்கிலே அதிகமான போர்விமானங்களை ருஷியா கொண்டிருக்கிறதென்றும், அதன்புதிய பருவான ஜெற்வெடிகுண்டுவிமானங்கள் அமெரிக்கஐக்கிய தேசத்திலுள்ள விசேஷப்பட்ட இலக்குகளைச் சேர்வதற்கென்றே கட்டப்பட்டனவென்றும் அமெரிக்க ஆகாயப்படை அதிகாரிகளின் தலைவரான ஜெனறல்ருவினிங் கூறுகின்றார்.

— ஜெனிவாநகரிலே இந்தோசீன சமாதானப்பேச்சுகள் நடைபெற்றுவருகின்ற ஐக்கியநாடுகளின் கட்டடத்திற்குச்சமீபமாய் வோ சொங் தெயிற் எனும் 34வயதுடைய இந்தோசீனர் ஒருவர் கடந்த 18தினங்களாக உண்ணாவிரதம் இருந்துவருகின்றார். தமது நாட்டில் திரும்பவும்சமாதானம் ஏற்படுகிறவரையில் தான்எதுவும் சாப்பிடுகிறதில்லையென்று அவர்சொல்லுகின்றார்.

— பசிபிக்சமுத்திரத்திலே 1954-ம் ஆண்டில் சலவாயுக்குண்டை வெடிக்கச்செய்த பரிசோதனைகள் வெற்றிகரமாக முடிவடைந்து விட்டனவென்று அமெரிக்க அணுசக்தி பாதுகாப்புப்பகுதியும், அணுச்சக்திக் கம்மிஷனும் சென்ற 14-ந் திகதி தெரிவித்துள்ளன. ஆனால், எத்தனைகுண்டுகள் வெடித்தன என்பது அறிவிக்கப்படவில்லை. பிகினிதீவில் மூன்று குண்டுகள் வெடித்ததாகவே முன்னர் அறிவிக்கப்பட்டது.

## நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் திருஇரக்கத்தாலும், சதாசகாயமாதா, ஆச். தெரேசம்மாள், நீற்றம்மாளுடைய மன்றாட்டினாலும் நான் கேட்டுக்கொண்டதைப் பெற்றுக்கொண்டேன். இவர்களுடையநாமம் புகழப்படுவதாக.

ஓர் அடியாள்
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறீஸ்துநாதருக்காக மரிக்க......

பாப்பரசர் சங்மானித்த "புறோ எக்கிளீசியா எத் பொண்ரிபிச்சே" எனும்மகிமை விருதைச் சமீபத்தில் ஓர்நாள் கவாலெறு மேற்றிராணியாரிடமிருந்து பெறவிருந்தார், மரியாயின்சேனையைச் சேர்ந்த மரியானோ மோஸிறேஎனும் கிக்குய சாதியினரான ஆபிரிக்கவாலிபர். ஆனால், அதற்குமுதனாள் மோமோஎன்ற வேதவிரோதிகளின் கேள்விப்படியே வேதத்தை மறுதலிப்பதைக்காட்டிலும் சாகிறதையே அவர் மேலாகத் தெரிந்துகொண்டார். அவரின் உடல் பயங்கரத்துக்குரியவிதமாய்த் தாறுமாறாக வெட்டுண்டு ஓர்ஆற்றில்கிடக்கக் கண்டறியப்பட்டது. அப்போதும் அவரதுசெபமாலை அவருடைய மணிக்கட்டிலே இறுகச் சுற்றியிருந்தது. இந்தப் படுபாதகமானகொலை நடைபெறுவதற்குச் சிறிதுவேளையின்முன் அவர் "கிறீஸ்துநாதருக்காக மரிக்க நான் ஆசிக்கிறேன்; எனதுசரீரத்தை அவர்கள் கொல்லலாம்; ஆனால், என் ஆத்துமத்தைக்கொல்ல அவர்களால் இயலாது"என்று வீரத்துவமாகக் கூறினின்றார்.

## ஐந்து புதிய அர்ச்சியசிஷ்டர்கள்

இம்மாதம் 29-ந் திகதி சனிவாரம் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்படவிருக்கின்ற முத். பத்தாம பத்திநாதரைத் தவிர, மற்றும் ஐந்துசுத்தவாளர்களும் வருகிறஆனிமாதம் 13-ந் திகதி ஞாயிறுவாரம் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்படுவார்கள். (1)பிறர்சிநேக பணிப்பெண்கள் சபையை அடியிட்டவளான சிலுவையில்அறையுண்ட யேசுவின் முத். மரியம்மாள், (2) ஓசியானியாவின் முதல்வேதசாட்சியான முத். பீற்றர் சானெல், (3) அர்ச் ஜோண்பொஸ்கோவின் மாணவரான முத். தொமினிக் சவியோ, (4) ஓர்ஸ்பானிய மேற்றிராணியாரான முத். யோசெவ் பிஞ்ஞாதெலி, (5) யேசுவின்திருஇரத்த மிஷனரிமார்சபையை அடியிட்டவரான முத். கஸ்பாறே தெபவல்லோஎன்பவர்களே இந்தஐவருமாவர்.

## இரா அப்போஸ்தல தொண்டு

இரா அப்போஸ்தலதொண்டிற்கெனப் பயன்படுத்துமாறு றோமைநகரிலுள்ள சென் வின்சென்ற் டீ போல் சபைக்குப் பரிசுத்தபாப்பரசர் ஒருதொகைப் பணம் உபகரித்திருக்கின்றார். இந்தப் பிறர்சிநேகத் தொண்டு மரியானோ திருமாஸிஎன்பவரால் வழிநடத்தப்படுகின்றது. இராக்காலத்திலேஇவர் மற்றும் சென் வின்சென்ற் டீ போல் சபைச் சகோதரர்களுடன் றோமைநகர் வீதிகளெல்லாம் சுற்றித்திரிந்து நித்திரைசெய்ய இடமின்றித்தவிக்கும் வறிய ஆடவர்களையும், பெண்பிள்ளைகளையும் அழைத்துச்சென்று அவர்கள் தங்குதற்கான இடவசதி தேடிக்கொடுக்கின்றார். அவர்களிலேசிலரைப் பாக்கங்களில்போடப்பட்டுள்ள ஆசனங்களிலும், சிலரைக் கோவில்கள், சந்நியாசஆச்சிரமங்களின் படிகளிலும், சிலரை வில்மாடங்களின்கீழும், அநேகரை அந்நகரிலுள்ள இக்காலமாதிரியான ஸ்றேஷனிலும் அவர் கண்டுகொள்ளுகின்றார். பின்னர் சபைச்சகோதரர்கள் அவர்களுக்கு மரியாதையானபடுக்கையும், ஓர்விடுதியில் அல்லது சந்நியாசஆச்சிரமத்தில், அன்றேல் ஆஸ்பத்திரியில் இராப்போசனமும் தேடிக்கொடுக்கிறார்கள். பாப்பரசர் இந்தத்தருமதொண்டைப்பற்றிக் கேள்விப்பட்டதும் தமது ஆசீர்வாதமும், பண உதவியும் அனுப்பிவைத்தார்.

# வீடுகளில் பாடசாலைகள்

கம்யூனிஸ்தர்களின் ஆதிக்கத்திலுள்ள மிகப்பெரும்பாலான நாடுகளில் சமயஸ்தாபன பாடசாலைகள்முதலாம் பிரத்தியேக பாடசாலைகளை நடத்துவது விலக்கப்பட்டுள்ளது. அதனால் அந்நாடுகளிலுள்ளபெற்றார் பத்துப் பேருக்குக் குறையாத பிள்ளைகளைக் கூட்டங்கூட்டமாகச் சேர்த்துத் தங்கள் இல்லங்களிலே பாடசாலைகளை அமைத்து அவர்களுக்குக் கல்விபயிற்றுவதற்கெனத் தங்கள் செலவிற் பிரத்தியேக ஆசிரியர்களை அமர்த்தியிருக்கின்றனர். இவ்விதஞ்செய்து அரசாங்க பாடசாலைகளில் ஊட்டப்படும் நிரீச்சுரவாத கல்வியிலிருந்து அவர்கள் தங்கள்பிள்ளைகளைப் பாதுகாத்து வருகின்றனர். அதனால் அந்நாடுகளில்,விசேஷமாய்நாடுபுறங்களில் அரசாங்கபாடசாலைகளில் படித்துவருகின்ற மாணவர்களின்தொகை இடையறாது விழுந்துகொண்டே வருவதாய் இரும்புத்திரைக்குப் பின்னாலிருந்து செய்தி கிடைத்துவருகிறது. போலாந்தின் கிராமப் பகுதிகளிலுள்ள பிள்ளைகளில் நூற்றுக்கு 65 விகிதமானோரே கம்யூனிஸ்தபாடசாலைகளில் கற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது. செக்கோசிலவாகிய பிள்ளைகளிலே கம்யூனிஸ்தபாடசாலைகளில் படித்துவருகிறவர்கள் நூற்றுக்கு 40 விகிதமானோர் தானுமில்லை. ஹங்கேரியிலுள்ள அநேக கத்தோலிக்ககிராமங்களில் பாடசாலைவரவு நூற்றுக்கு 40 முதல் 60விகிதமும், ரூமேனியாவின் சிலபகுதிகளிலே 35 விகிதமும் வீழ்ச்சியடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்நாடுகளிலுள்ள கத்தோலிக்க பெற்றார் கம்யூனிஸ்தர்களாலே தங்கள் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர்கள், நியாயவாதிகள், சிவிலுத்தியோகஸ்தர்களைத் தங்கள்வீட்டுப்பாடசாலைகளின் ஆசிரியர்களாக அமர்த்தியிருக்கின்றார்கள்.

## பர்மிய யாத்திரைக்கோஷ்டி

இம்மாதம் 29-ந் திகதியன்று முத். பத்தாம் பத்திநாதருக்கு அருளப்படவிருக்கும் அர்ச்சியசிஷ்டபட்ட திருவைபவத்திற்கெனப் பர்மாவும் யாத்திரைக் கோஷ்டிஒன்றை றோமாபுரிக்கு அனுப்பிவைக்க விருக்கின்றது. பர்மிய கல்விமந்திரியாரும், ஓர் கத்தோலிக்கருமான திரு. தான்ஒங் அவர்களே இந்தயாத்திரைக்கான ஒழுங்குகளைச் செய்துவருகின்றார். றோமாபுரியைத்தொடர்ந்து இந்தயாத்திரைக் கோஷ்டியினர் ஆங்காங்குள்ள மரியாயின் திருசேத்திரங்களைத் தரிசிப்பார்கள். பர்மாவிலுள்ள 1 கோடியே 85 லட்சம் குடிசனங்களில் கத்தோலிக்கர் ஏறக்குறைய 1,45,000பேரே.

## முதலாவது கன்னிகாசபை

யப்பானியதேச நாகோயா நகரிலே பெண்மணிகளான உபதேசிமாருக்கென்று திருச்சபைச்சட்டப்படி ஓர்கன்னிகாசபை ஆக்கப்பட்டிருக்கிறது. இந்தமாதிரியானசபை ஒன்று ஆக்கப்பட்டிருப்பது உலகில் இதுவே முதன்முறையாகும். முந்தப் பத்துப்பேர் இதிற் சேர்ந்து பயிற்சிபெற்றுவருகின்றனர். பயிற்சி முடிந்ததும் மிஷன்நிலையங்களில் முழுநேர வேலைசெய்யும் உபதேசிமாராக இவர்கள் பணியாற்றுவார்கள், அன்றேல் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், தொழிற்சாலைகளில் அப்போஸ்தலதொண்டு ஆற்றிவருவார்கள். வழமையான வாக்குத்தத்தம் கொடுத்தபோதிலும் இவர்கள் சாதாரணபெண்களைப்போலவே உடைதரித்துக் கொள்வார்கள். சிலர் தங்கள் பெற்றோருடன் தொடர்ந்து வசிப்பர். இந்தச்சபை கன்னிகையும், தாயுமான அர்ச். மரியாயின் ஸ்திரீ உபதேசிமார் சபையென்ற நாமத்தைப்பெற்றிருக்கிறது.

## யப்பானிய வேதசாட்சிகள்

யப்பானியவேதசாட்சிகள் பேரால் கட்டப்பெற்ற முதற் கத்தோலிக்ககோவில் இத்தாலியிலே சிவிற்றாவெக்கியாநகரில் இருந்துவருகிறது. இந்தவேதசாட்சிகளில் 26குருமார் அடங்குவார்கள். இவர்கள் 1864-ம ஆண்டு ஒன்பதாம்பத்திநாத பாப்பானவராலே அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பெற்றார்கள். ரோக்கியோநகரிலிருந்து போன ஓர்யப்பானிய சித்திரகாரரான புறொபெசர் லுக்கா ஹசேகாவா அவர்கள் முன்சொன்னகோவிலைத் தமது சித்திரவேலைப்பாடுகளால் விந்தாரித்து அழகுறச்சிங்காரித்துவருகின்றார். சமீபத்திலே அவர் 26 வேதசாட்சிகளும் வேதசாட்சிகளான தன்மையை அந்தக் கோவிற்சுவர்களிலே விந்தாரித்து முடித்திருக்கின்றார். தற்போது அடுத்தாருக்குமேலாகவிருக்கின்ற வில்மாடப்பகுதியிலே வேலைதொடக்கியிருக்கின்றார். வருகிறபுரட்டாசிவரையில்தான் இந்தவேலை முடிவடையவிருக்கிறது.

## எட்டுப்பிள்ளைகளின் குருதந்தை

றோமாபுரியிலே பரிசுத்தஅப்போஸ்தலர்களின் கோவிலில் சென்ற பாஸ்குத்திருநாளுக்கு முதனாள் எட்டுப்பிள்ளைகளின் தந்தையும், தாரமிழந்த ஓர்டச்சுக்காரருமான 61 வயதுடைய வண. ஜி. ஏ. ஜே. பைக்கர் அவர்கள் குருத்துவாபிஷேகஞ் செய்யப்படலாயினர். அவ்வேளை இவரது எட்டுப்பிள்ளைகளில் எழுவர்உட்பட இவர்குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் 48 பேர் சமுகமளித்திருந்தனர். இவரதுபிள்ளைகளில் இருவர் குருமாராயிருக்கின்றனர். ஆபிரிக்காவிலே தூமி விக்காரியத்தைச்சேர்ந்த அபொங்-ம்பாங் எனும் குஷ்டரோகர்கிராமத்தில் இவர் தொண்டாற்றவிருக்கின்றார். அங்கே தம்முடைய பாரியாரின் ஞாபகார்த்தமாகத் தாம்கட்டிய கோவிலிலேயே இவர் தமது முதற்பூசையை நிறைவேற்றுவார்.

## வத்திக்கான் வானொலி நிலையம்

வத்திக்கான் வானொலியை ஐரோப்பாவின் மகாசக்திவாய்ந்த வானொலிநிலையங்களில் ஒன்றாகச்செய்யுமாறு ஏற்பதற்கொன்றும்,பரப்புதற்கொன்றுமாக வத்திக்கானுக்குவெளியே றோமைநகருக்கு வடக்கிலும், தெற்கிலுமாக இருபெரியநிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இந்தஇருநிலையகட்டடங்களையும் அமைப்பதற்கான வசதியளிக்கும் உடன்படிக்கை ஒன்று வத்திக்கானுக்கும், இத்தாலிய அரசாங்கத்துக்குமிடையே நடைபெறலாயிற்று. இவ்விருபுதிய நிலையங்களும் வத்திக்கான்வானொலியை உலகின்மகாதூரமான இடங்களுக்கும் அனுப்புமாறு செய்யக்கூடியனவாகும். தற்போது வத்திக்கானில் இருந்துவருகின்றவானொலி முந்தமுந்த மார்க்கோனிபிரபுவால் அமைக்கப்பெற்றுக் காலகதியில் திருத்தமும், விருத்தியும் பெற்றதாகும்.

செபமாலைமாதா திருநாள் ஆரம்பத்தில் என்ன திருநாளாகக் கொண்டாடப்பட்டு வந்தது?

வெற்றி மாதாவின் திருநாளாகக் கொண்டாடப்பட்டுவந்தது. 1571-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 7-ந்திகதியன்று லெப்பானரோ யுத்தத்தில் துருக்கியரை வெற்றிகொண்டதற்காகத் தேவனுக்கும், தேவதாயாருக்கும் நன்றியறிந்ததோத்திரமாய் இந்தத்திருநாளை ஐந்தாம்பத்திநாத பாப்பானவர்ஏற்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வைகாசிமாதம்

போதுக்கருத்து :— ருஷியமக்கள் தேவதாயாரான மாசற்றமரியாயின் வழியாய் நாஸ்திககொடுமையிலிருந்து விடுதலையடையும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— மகமதியர் தெய்வீக சிநேகப் பெருக்கத்தைத் தெரிந்துகொள்ளும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
**பாதுகாவலன்**
1954-ம் ஆண்டு
வைகாசி மாதம் 20-ந் திகதி

## ஆஸ்திக — நாஸ்திக போராட்டம்

சோவியற்ருஷியாவிலும், அதன்சகநாடுகளிலும் நாஸ்திக கம்யூனிஸ்த வேதாளங்கள் கடவுளையே — கடவுள்வழிபாட்டினையே பூண்டோடு களைந்துவிடுவான் கடந்தபல்லாண்டுகளாகப் பேராவேசத்துடன் வேலை செய்துவருகின்றன. கூருக்கெதிரே காலைஉதைத்தால் காலுக்கல்லாது கூருக்குச்சேதம் வரப்போவதேயில்லை. அவ்வாறே கடவுளையும், அவரதுவழிபாட்டையும் அழிக்கமுனைந்துநிற்கும் இந்தநாஸ்திககுழாங்கள் கடைசியாகப் பலமிழந்து, படுதோல்வியடைந்து, தங்கள்மதியீனத்தை நினைந்து மலையைஎதிர்த்த மண்ணுங்கட்டிபோலானேமேயென்று உணருங்காலம் நிச்சயமாகவந்தேதீரும். ருஷியாவிலும், அதன் சகநாடுகளிலும் கம்யூனிஸ்தர்கள் இத்தனைபலஆண்டுகளாய் மும்முரமாக நடாத்திவருகின்ற வேதகலாபனை எதைத்தெரிவிக்கின்றது? அவர்கள் என்னபாடுதான் பட்டபோதிலும், எத்தகைய அட்டூழியங்கள்தான் செய்தபோதிலும் கடவுட்பக்தர்களை முறியடிக்கவியலாது தயங்குகிறார்களென்பதையே நன்கு தெரிவிக்கின்றது.

ஆம், இன்று ருஷியாவிலும், அதன்சகநாடுகளிலும் கம்யூனிஸத்தைஎதிர்த்து அந்தரங்க சேனைஒன்று போட்டாபோட்டியாகப் போராட்டம்நடத்தி வருகின்றது. கடவுள் இல்லையென்ற சோவியற்றர்களின் நாஸ்திகத்தைஎதிர்த்துக் கடவுளுக்காகப் போராடிவருகின்றது. இந்தச்சேனையிலே ருஷியாவின் முபூச்சனங்களிலும் பதின்மரில் ஒருவர்வீதம் அதாவது 1 கோடியே 80லட்சம்மக்கள் சேர்ந்திருக்கின்றனர். மற்றோர்விதமாகச் சொல்லுகிறதானால், ருஷியாவிலே கம்யூனிஸ்தகட்சி அங்கத்தவர்களாய் இருந்துவருகின்ற 63லட்சம்பேரிலும் இவர்கள் தொகை மிகக் கூடியதாகும். இந்தஅந்தரங்க சேனையிலே தொழிலாளர், டக்றர்மார், வழக்கறிஞர், ஆசிரியர், சிற்பர்கள் என்போராய்ப் பலதிறப்பட்டோரும் அங்கத்தவர்களாய் இருக்கின்றனர். இவர்கள்ருஷியகமங்களிலும், தொழிற்சாலைகளிலும், சோவியற்பட்டாளங்களிலும், மிதமிஞ்சித்தேங்கியிருக்கும் அரசியற்சிறைச்சாலைகளிலும் கம்யூனிஸ்த கட்சியினருள்தானும்—அநேகமாய்ச் சோவியற்அரசாங்க மேற்சங்கங்களிற்றானும் இருந்துவருகின்றனர். இவர்களெல்லாம் ஒரேசமயத்தைமாத்திரம் சேர்ந்தவர்கள் அன்று. சோவியற்ருஷியாவில் சகலசமயங்களுமே விலக்கப்பட்டிருந்தபோதிலும் இந்தமறைமுகமான அந்தரங்கசேனை கத்தோலிக்கர், பிரிவினைக்கிறீஸ்தவர்கள், யூதர்கள், முஸ்லீம்கள் ஆதியாம் பல்வேறு சமயத்தவர்களையுமே அடக்கியதாயிருக்கின்றது.

இத்தகைய மறைமுகமான சேனைஒன்று இருப்பதைக் 'கிறெம்லின்' எனஅறியப்படும் சோவியற் அதிகாரபீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் நன்கறிவார்கள். அதனை ஒழித்துவிடுமாறு அவர்கள் தங்கள்வசமுள்ள சகல ஆயுதங்களைக்கொண்டும் அதை எதிர்த்துப் போராடினார்கள். அதாவது, அரசாங்கத்தின் ஆதிக்கத்திலுள்ள பாடசாலைகள், அச்சகங்கள், வானொலிகள்மூலம்பிரசாரங்கள்செய்தார்கள். வேவுகாரர், தகவல்வெளியிடுவோர், இரகசியப்பொலிசர் மூலம் பலவிதகிருத்திரமங்கள் செய்துபார்த்தார்கள். கொடிய உபத்திரவங்கள்செய்து வருத்தியும், சிறைத்தண்டனை, கொலைத்தண்டனை விதித்தும் ஒருகை பார்த்தார்கள். ஆயினும் இந்த அந்தரங்கசேனையோ தொகையிலும், பலத்திலும் நாளொருவண்ணமாய்க் கதித்துக்கொண்டேயிருக்கிறது. "மனுவைப் படைத்தான் தனைவணங்க" என்பதை மேற்கொண்டு, வழிபாடு செய்யப்படவேண்டியவர் கடவுளேயல்லாது மற்றெவருமே—மற்றெவையுமேயல்லவென்று அவர்பக்தர்கள் அவரைவணங்கிவர, சோவியற் நாஸ்திகஅரசோ வழிபாடு செய்யவேண்டியது கடவுளை அல்ல, இராச்சியத்தையே—இராச்சிய அதிகாரத்தையே எனச்சாதித்துக் கடவுளை எதிர்த்தும்,சமயத்தைப்பகைத்து, சமயகுரவர்கள், சமயபக்தர்களை வதைத்துப் பொருதிக்கொண்டிருக்கின்றது. இந்தப்போராட்டத்தில் சோவியற்ருஷியா வெற்றிபெறுவது முற்றுமே அசாத்தியமாகும். அதன் நாஸ்திக கம்யூனிஸம் அங்குமிங்குமாய் அந்தரங்கமாகப் பலநாடுகளையும் கறையானைப்போன்று அரித்துக்கொண்டுவர, ருஷியாவில் தலைகாட்டியிருக்கும் கடவுட்பக்தர்களான ஆஸ்திகர்குழாமோ ருஷியாவிலேயே கம்யூனிஸத்தை அரித்துக்கொண்டுவருகிறது. அடிமரத்திலேயே கோடரிவைத்ததுபோன்ற இது செயல் கம்யூனிஸத்தின் அழிவுகாலம் அண்மிவிட்டதென்பதைத் தெள்ளிதிற்காண்பிக்கிறதன்றோ!

ரோமைநகரின் மிகப்பெரிய விசாரணைப்பங்கு எது?

கிறீஸ்துராசா விசாரணைப்பங்கேயாகும்.



## சதாசகாயமாதா கோணம்

### வீரத்தாய்

மரியாய் நமது சதாசகாயமாதா, அவ நமதுவீரத்தாய். தமது திருக்குமாரனின் கசப்பான பாத்திரத்தில் மூக்குமுட்டப்பருகிய தேவதாய், வியாகுலவாளால் ஊடுருவப்பட்ட இருதயத்தைக்கொண்டுள்ள தேவதாய், தமது தேவகுமாரன் ஒருகுற்றவாளியாகத் தீர்வையிடப் பட்டதைக்கண்டும், மரணஅவஸ்தைப் படுவதையும், சிலுவையில் தொங்குவதையும்கண்டும் சொல்லிலடங்கா மனோவேதனைப்பட்ட தேவதாய், கடைசிமட்டும் ஒப்பற்ற வியாகுலத்தோடும், அசைக்கமுடியாத மனோதிடத்தோடும் அவசிலுவைஅடியிலே நின்றா.

"நான் தாகமாயிருக்கிறேன்" என்று நமதுஆண்டவராகிய யேசுநாதர் திருவாய்மலர்ந்த வாக்கியத்தைக் கேட்டபோது, அவளின் கண்ணீரைத்தவிர அவளிடத்தில் வேறுஎன்ன இருந்தது? துக்கசந்தாபத்தைத்தவிர, வேறுஎன்ன காணக்கூடியதாக இருந்தது? மரியமதலேனாள் அவருடையபாதத்தண்டை ஆவிசோர்ந்து அடங்காத்துயருடன் வாடிவதங்கி வீழ்கிறாள். ஆனால், மரியாய், நமதுவீரத்தாய் தனது திருக்குமாரன் தொங்கும் சிலுவைமரத்தை உற்றுப்பார்த்துக்கொண்டு நின்றாளெனச் சுவிசேஷகஅருளப்பர் கூறுகின்றார். மற்றவர்கள் கூறிய வன்சொற்கள், பகிடிபரிகாசங்கள், தேவதூஷணங்கள் எவ்விதமனக்கசப்பை உண்டுபண்ணியிருந்தாலும் வீரங்குன்றாமல், திடன்குறையாமல் அடக்கமுடியாத் துயரத்தின் மத்தியிலும் தைரியமாய்நின்றா நம்வீரத்தாயாம் தேவதாய். யுவானியாரை அடையாளமாகக்கொண்ட மனுக்குலத்துக்கு அகிலலோக மாதாவாகத் திகழ, நமதுதாயாகவரச் சம்மதித்து வீரத்துடன் நிமிர்ந்துநின்றா தேவதாய். நாம் சீவிப்பதற்கேதுவாகத் துக்கசந்தாபத்தைச் சகித்தா நம்வீரத்தாயாம் தேவதாய்.

## தாய்மார் தினம் —26-5-54.

யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே 26-5-54 புதன்கிழமை தாய்மார்தினம் கொண்டாடப்படும்.

அன்றுகாலை மூன்று திவ்வியபூசைப் பலிகள் நோவனையிற் பங்குபெறுவோரின் தாய்மார்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படும். சாயந்தரம் நோவனைவேளையிலும் அவர்கள் நினைவுகூரப்படுவார்கள்.

| | |
|---|---|
| தாய்மாரே ! | உங்களைப் பற்றி நினைக்க, உங்களுக்காக மன்றாட இத்தினத்தில் நேரங் கண்டு கொள்ளுங்கள். |
| மகனே ! மகளே ! | தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை. உன்னைப் பெற்று வளர்த்த தாய்க்காக விசேஷவிதமாய் மன்றாட மறக்காதே. |

வீரத்தாயாம் தேவதாய் நாம் நமது சிலுவைகளை எவ்விதம் சுமக்கவேண்டும்என்றும், எவ்விதம் அவற்றைவரவேற்க வேண்டுமென்றும் எமக்குக் காண்பித்திருக்கிறா. மூன்றுமணித்தியாலமாகச் சிலுவையிலறைதல் முடியும்வரை இந்தநல்ல தாயாரைப்போலச் சிலுவையடியிற் தரித்துநிற்கச் சம்மதிப்போர் நம்மில் மிகச்சிலரே என்னலாம். கல்வாரிமலையைவிட்டு ஓடிப்போகிறவர்கள்போல நாமகாணப்படுகிறோம். காலையில் உயரியதீர்மானங்கள் செய்கிறோம். மாலைவரை அவற்றைக் கடைப்பிடித் தொழுகுவோர்தொகை அருமையிலருமை.

மரியாயை வீரத்தாயாக்கியது அவவுடையஇருதயத்தில் கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருந்த தேவநேசமும், பிறர்நேசமும்என்று சொல்லலாம். இல்லையேல் இரத்தக்கறைபடிந்த ஜெருசலேம் வீதிகளூடே செல்ல எங்கிருந்து அவவுக்கு வீரமும், திடமுங் கிடைத்தன?

ஆகவே, இந்தவீரத்தாயிடம் நாம் கடைசிவரை நிலைநிற்கும் வரப்பிரசாத அநுகூலக் கேட்போமாக. கல்வாரிமலையிலே தமதுதிருச்சுதன் சிலுவையில் அறையுண்டு பாடுபட்டபோது, கடைசிமட்டும் அவாண்டை நின்றதுபோல எமது துன்பதுரிதங்களிலே, கஸ்தி வேதனைகளிலே, பசாசின்சோதனைகளிலே நமதண்டையிலும்நிற்கும்படி அவவை இரந்துகேட்போமாக. எமது சிலுவையை நல்லமனதோடு சுமக்க எமக்குத்தேவையான பெலனை, தைரியத்தை, திடனைத் தந்தருளும்படி இந்தநல்லதாயாரை, வீரத்தாயாரை எப்போதும் இரந்துகேட்போமாக.

"மரியாயே, நல்லதாயாரே! எப்போதும் எம்முடன்இருந்தருளும். இப்போதும், விசேஷமாக எங்கள்மரண நேரத்திலும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்."

## NOTICE

**To the Priests of the Jaffna Diocese**

The anniversary of Bishop's Consecration is on the 22nd (not on 23rd May.) Change Ordo accordingly



## மேற்றிராணித்துவ அபிஷேக ஐந்தாவது வருட நிறைவுதினம்

யாழ்ப்பாண மேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள் மேற்றிராணித்துவ அபிஷேகம் செய்யப்பெற்ற ஐந்தாவது வருட நிறைவுதினம் நிகழும் வைகாசிமாதம் 22-ந்திகதியாகிய நாளை நின்றுவரும் சனிக்கிழமை வருகிறது. அதனால் ஆண்டவர்அவர்களின் ஞானமக்களாய் இம்மேற்றிராசனத்தில் வதியும் கத்தோலிக்கமக்கள் சகலரும் அன்றுதினம் திவ்வியபூசைகண்டு, திவ்வியநன்மைபெற்று, விசேஷசெபங்கள்செய்து எமது ஞானமேய்ப்பரின் நற்கருத்துகள் நிறைவேறும் படியும், அவர் கையிடும் சற்கருமங்கள் கைகூடும்படியும், ரோமாபுரிக்குச் சென்றுகொண்டிருக்கும்அவர் தமதுதிருயாத்திரையைச் சிந்தாத்திரையாக முடித்துச் சேமமேநம்மத்தியில்வந்து சேரும்படியும் விசேஷவிதமாக மன்றாடிக்கொள்வார்களாக!

## சமாதானத்திற்காகச் சிறுவர்களின் செபம்

இம்மாதம் 23-ந் திகதியைச் சமாதானத்திற்காகச் சிறுவர்கள் செபிக்கும் நாளாக அனுசரிக்கும்படி நமதுபரிசுத்தபிதா கட்டளைதந்திருப்பது மாத்திரமல்ல, அதற்கேற்ற செபம்ஒன்றையும் ஆக்கித்தந்திருக்கிறார்

ஆகையால், சிறுவர்கள்எல்லோரும் இந்தத்தினத்தில் (அடுத்தஞாயிறு) குறிப்பாகச் சமாதானத்திற்காகச் செபிப்பார்களாக.

### செபம்

அன்பான யேசுவே! முன்னொரு காலம் தேவரீர் எங்களைப்போல் ஓர் சிறு பிள்ளையாய் இருந்தீரென்றும், சிறுவர்கள் உம்மைச்சூழ்ந்திருப்பதை விரும்பினீரென்றும் நாங்கள் அறிவோம். ஆகையால்,சகலதேசங்களிலுமுள்ள சிறுபிள்ளைகளாகிய நாங்கள் உமக்கு நன்றிசெலுத்தவும், சமாதானத்திற்காக எங்கள்செபங்களை ஒப்புக்கொடுக்கவும் உமது பாதத்தண்டையில் கூடி நிற்கிறோம்.

எவ்விடத்திலும், எவ்வேளையிலும் எங்களுடன் இருக்கத் தேவரீர் விரும்புகிறீரே. எங்கள்இருதயங்களை உமது இல்லிடமாகவும், பீடமாகவும், சிம்மாசனமாகவும் ஆக்கியருளும். நாங்கள் எல்லோரும் உமதுஅன்பிலும், அரவணைப்பிலும் ஒன்றித்த ஓர்பெரிய குடும்பமாய் இருக்க அருள்புரியும். எங்கள் பரலோகபிதாவின் பிள்ளைகளை உம்மிடமிருந்தும், எங்களை ஒருவர் ஒருவரிடமிருந்தும் பிரிப்பதற்கு ஏதுவான சுயபட்சம்நிறைந்த சிந்தனை, கிரிகைகளைச் சிறியோர்பெரியோர் எல்லாரிடமிருந்தும் அகற்றியருளும். உமதுவரப்பிரசாதம் உம்முடையவும், உமது பிதாவுடையவும் சத்துராதிகளிடமிருந்து எங்களைப் பாதுகாக்கும் கேடயமாய் இருக்கக்கடவது. அவர்கள் அறியாமற் செய்கிறபடியால், ஆண்டவரே! அவர்களை மன்னித்தருளும். உமதுஅருளால் மனிதர் ஒருவரைஒருவர் நேசிப்பார்களேயாகில், உலகத்தில் உண்மையானசமாதானம் இருக்கும் அல்லவோ! அப்பொழுது சிறுவர்களாகியநாங்கள் இன்னும் ஒருயுத்தத்தின் கொடுமைகளுக்குப் பயப்படாமல் சீவிக்கக் கூடியவர்களாவோம்.

சமாதானத்திற்காக நாங்கள்செய்யும் இந்தவேண்டுதல்களை உமக்கு ஒப்புக்கொடுக்கும்படி உமது மாசற்றமாதாவும், எங்கள்தாயாருமான அர்ச்சிய சிஷ்டமரியாயை இரந்து மன்றாடுகிறோம். இப்பொழுது நீர் எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுவீர் என்று நம்பி உமக்கு நன்றி கூறுகிறோம் யேசுவே! — ஆமென்.

---

### சீனப்பிள்ளைகளின் பாடசாலை

இலங்கையிலே சீனப்பிள்ளைகள் தங்கள்சுவபாடசாலைஒன்றை விரைவிலே கொண்டிருக்கப் போகிறார்கள். இலங்கையிலுள்ள சீனர்சங்கத்தாரால் நடத்தப்படவிருக்கும் இப்பாடசாலை தனது இடாப்பிலே 5வயதுக்கும், 10வயதுக்கும் இடைப்பட்ட 50பிள்ளைகளைக் கொண்டிருக்கும். ஆரம்பபாடசாலைகளுக்கென்று வித்தியாபகுதி விதித்துள்ள அதே பாடத்திட்டத்தையே இதுவும் கொண்டதாயிருக்கும். பிள்ளைகள் சீனம், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்றுபாஷைகளும் படிப்பிக்கப்படுவார்கள்.

### திருவாங்கூர்-கோச்சி அரசியல்

திருவாங்கூர்-கொச்சி இராச்சியத்தின் முன்னாள் நிதி-உணவு மந்திரியாரும், பிரபல அரசியற் தலைவருமான திரு. பி. கோவிந்தமேனன் அவர்கள் கொழும்பிலே பரதசேவா சங்கத்தின் பதினைந்தாம்ஆண்டு மகாநாட்டுக்குத் தலைமைவகிக்குமாறு சென்ற சனிக்கிழமை விமானமூலம் கொழும்புவந்து சேர்ந்தனர். இவர் திருவாங்கூர்-கொச்சி அரசியல்நிலைமைபற்றிப் பேசியபோது: "கம்யூனிஸ்தர்களும், அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் பலமிழந்து வருகின்றார்கள்; திருவாங்கூர்-கொச்சி இராச்சியத்தில் அவர்களின் செல்வாக்குக் குறைந்துகொண்டு வருகின்றது; ஐக்கிய முன்னணியை அமைத்த புரட்சிச் சோஷலிஸ்தகட்சியினரும், கம்யூனிஸ்தர்களும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டேயிருக்கின்றன"ரெனத் தெரிவித்திருக்கின்றார்.

---

— யுத்தம்ஒன்று மூண்டுகொள்ளுமிடத்து, அத்திலாந்திக் உடன்படிக்கையில் சேர்ந்துள்ள நாடுகளின்படைகள்வசம் பத்தொன்பதுநாட்களுக்கு மாத்திரமேபோதிய குண்டுகள்ஆதியன இருப்பதாகப் பரீஸ்நகரிலே சென்ற வெள்ளிக்கிழமை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும்இது சென்றவருடத்திலும் பெருந்திருத்தமுற்றும், அவ்வருடத்திலே சிலநாடுகளிடம் ஒன்றுமுதல் மூன்றுநாட்களுக்குப்போதிய குண்டுகள் ஆதியனவே இருந்தனவென்றும் மேஜர்ஜெனறல் கார்வின் கூறியிருக்கிறார்.

### மரியாயின்வருட
## ஞானவொடுக்கம்
### மிருசுவில்

மிருசுவில், அர்ச். நீக்கொலார் ஆலயத்திலே இம்மாசம் 9-ந்தி காலைமுதல் ஓர்மகாஞானவொடுக்கம் மன்னார்க் கட்டளைக்குரவரும், மன்னார்-மாதோட்ட மூப்புச்சுவாமியாருமான அதிவண. S. பீற்றர்சுவாமி அவர்களால் போதிக்கப்பட்டுப் 16-ந்திகதிகாலை முடிவானது.

விலைமதித்தற்கரிய நமதுஆத்துமத்தைப்பற்றியும், செபம், தபம், மரணம், பிறர்சிநேகம், கற்பு, குடும்பசெபமாலை என்பன பற்றியும் சுவாமியவர்கள் செய்தபிரசங்கங்கள் மக்களின் மனத்தைஉருக்கி அவர்களைத் தேவசிநேகத்தில் வளரசெய்ய உதவின. சிலுவைப் பாதையைத் தியானிக்கும்முறையில் சுவாமியவர்கள் எமக்கு ஓர்முன்மாதிரியாக விளங்கினார். சிறுவர்களுக்கென்றும் சிறுபிரசங்கங்கள்செய்தார். 15-ந் திகதிஇரவு சதாசகாயமாதாவின் படத்தை ஸ்தாபித்து அவவின்பத்தியை எங்கள்மத்தியில் நிலைநிறுத்தினார். பாடசாலைபிள்ளைகள் தங்கள் நன்றியுரையில் "யுவானியாரின் குரலொலியைச் சுவாமியவர்களின் பிரசங்கத்தில் கேட்டதாக"ச் சொல்லி நன்றிகூறினார்கள். அவர் பிள்ளைகளின் அயராமுயற்சியையும், நீடியஆயுளையும்விரும்பி அவர்களை ஆசீர்வதித்தார்.

16-ந்திகதிகாலை திவ்வியபூசையுடனும், சற்பிரசாதஆசீர்வாதத்துடனும் ஞானவொடுக்கம்முடிந்ததும் சுவாமியவர்கட்கு நன்றிகூறி வழியனுப்பினோம். இவைகள்எல்லாம் திறம்பட நடைபெறக் காரணமாயிருந்து உற்சாகமாகக் கரிசனையுடன் உழைத்த எமது கட்டளைக்குரவர் வண. ஜே. ஸ்பம்பதி சுவாமியவர்களுக்கு நாம்நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

— நிருபர்.

---

— ஜப்பானுக்கு நான்குஅமெரிக்க டிஸ்திரோயர்க்கப்பல்களை இரவலாக வழங்குவதற்கான உடன்படிக்கை ஒன்று சென்றவெள்ளிக்கிழமை ரோக்கியோநகரில் நிறைவேறியிருக்கிறது. இந்தடிஸ்திரோயர்களிலே இரண்டு 1,600தொன்வகுப்பையும் மற்றிரண்டும் 1,400தொன்வகுப்பையும் சேர்ந்ததாயிருக்கும்.

# வீரமாமுனிவர் பெருமை

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்)

(சென்றவாரத் தொடர்ச்சி)

அறுபத்தேழு வயதுவரையில் தமிழகத்தில்இருந்து சுமார்நாற்பதாண்டுகள் பொதுநலம்புரிந்தார் இப்புண்ணியர். இவர் எப்பொழுதும் சிற்றூர்களிலேயே அடக்கமாயிருந்து பொதுமக்களுக்குத் தமிழும், அறநெறியும் பயிற்றினர்.

கோனான்குப்பம் என்ற சிற்றூரில் அழகான மாதாகோயில் கட்டி, அங்கேயே கலைத்தவம் புரிந்து இவர் தேம்பாவணி அருளினர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தேம்பாவணி அரங்கேறியது. அதைச்செவித்த புலவர்களே இப்பாவலர்க்கு வீரமாமுனிவர் என்ற காரணபெயரைச் சூட்டிப் பெருமைசெய்தனர். இதைத்தவிர, இவர் திருக்காவலூர்க் கலம்பகம், அன்னைஅழுங்கல் அந்தாதி, அடைக்கலமாலை, சித்தரின் அம்மானை முதலிய பல செய்யுள் நூல்களைச் செய்தார். தமிழ்உரைநடைக்கும் வழிகாட்டியவர் இவரே. இவர் எழுதிய பரமார்த்தகுரு கதை நகைச்சுவையில் இணையற்றது. வேதவிளக்கம், வேதியர்ஒழுக்கம்என்னும் இரண்டுநூல்களும் சிறந்தசன்மார்க்க விளக்குகளாகும். நிகண்டை உருத்தள்ளி வருந்திய அக்காலப்புலவருக்குச் சதுரஅகராதி வகுத்தளித்தவர் இம்முனிவரே. இவர் வகுத்த அகராதியைத் துணைகொண்டே பிற்காலத்தில் பலஅகராதிகள் எழுந்தன. தமிழ்இலக்கணத்தை இவர் தொன்னூல்விளக்கமாகச் செய்தளித்தார். இத்தொன்னூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையுந் தழுவிய நன்னூலாக விளங்குகிறது. அந்நூலை மதுரைப்புலவர் வியந்து இவருக்குத் திருமதுரைச் செந்தமிழ்த் தேசிகர் என்ற பட்டமளித்தனர்.

தைரியநாதர் இலக்கிய சமயத் தொண்டுமட்டும் செய்யவில்லை. இவர் அரியதியாகி. தம்மையே பொதுநலத்திற்குத் தந்த தூய துறவி. சன்மார்க்கத்தை நிலைநாட்ட இவர் பட்டஇடர்கள் பலகோடி. போரும், பொறாமையும் நிறைந்த அந்தக் காலத்தில் துரோகிகளாலும், அறிவிலிகளாலும், வஞ்சப்பதர்களாலும் இப்புண்ணியபுலவர் பட்டபாடு கொஞ்சமன்று. வீரமாமுனிவர் கயத்தாற்றின்அருகே குருக்கள் பாடியில் அருட்பணி செய்திருந்தார். ஒருகயவன் அன்பன் போல் நடித்து, அவரிடம் பெறவேண்டியதெல்லாம் பெற்றுக்கொண்டு, பக்கிரிவேடம்போட்டுத் தப்பி, ஆலங்குளத்திற்குச் சென்றான். அங்கே மதுரை நாயக்கர்படை வரிவசூலுக்காக முகாம்போட்டிருந்தது. கயவன் படைத்தலைவரிடம் கண்டபடி கோளேற்றி, குருக்கள்பாடிக் கிறிஸ்துவ சாமியார் தன்னை அடித்து விரட்டியதாகவும், ஏராளமானபணம் புதைத்து வைத்திருப்பதாகவும், பாமரமக்களை ஏமாற்றுவதாகவும் பொய் கட்டிவிட்டான். முரட்டுப்படை சினந்துவந்தது. கயவன் முனிவரைக் காட்டிக்கொடுத்தான். படைவெறியர் முனிவரைப் பிடித்துக்கட்டிச் சிறையிட்டு வருத்தினர். திருமடத்தைக் கொள்ளையடித்தனர். ஆனால், அங்கே தங்கமபூசிய சிலுவைத் தகடுகளே இருந்தன. படைகள் மடத்தைஇடித்து, திருச்சபையினரை வருத்தி அட்டூழியங்கள்செய்தன. முனிவர்நாட்டியஊர் முரட்டுக்கயவன் வஞ்சனையால் அழிந்தது. பொறுமையிற்சிறந்த முனிவர் தைரியமாக உள்ளதைச்சொல்லி வாதாடினார். அவரைக்கொலைசெய்யும்படி சேனைத்தலைவன் ஆணையிட்டான். கடவுள்அருளால் ஒரு நல்லவர்தோன்றி, அவரைவிடுவித்தார். முனிவர் சென்றதற்குவருந்தாமல், மீண்டும் முயன்று தமதுதிருப்பணியை முன்னினும்சிறப்புற நாட்டினார்.

முனிவர் ஆவூரில் அருட்பணி செய்தபோது சந்தா சாகிபு படையெடுத்து ஊரையே அழிக்கப்புகுந்தான். பொதுமக்கள் அஞ்சிநடுங்கினர். அஞ்சாதீர், ஆண்டவன் இருக்கிறான் என்றார் தைரியநாதர். படைவெறியர் அவரைக்கட்டிச் சந்தா சாகிபு முன் கொண்டு சென்றனர். முனிவர் சாகிபுடன் பாரசீக மொழியிற்பேசித் தருமநீதிபுகட்டினார். சந்தா சாகிபு பெருமகிழ்ச்சியடைந்து, அவர்கட்டுகளை அவிழ்த்து, விருதுகள் வழங்கித் தன்மந்திரியாக வைத்துக்கொண்டு பெரும்பயனடைந்தான். தமிழ் வளர்ச்சியுடன் தமிழ்மக்கள் வாழ்விலும் முனிவர்உள்ளம் கலந்திருந்தது. இத்தகைய புனித புலவரைத் தமிழர், தமிழகம் உள்ளமட்டும், தமிழ்உள்ளமட்டும் கொண்டாட வேண்டும்.

வீரமா முனிவர், தைரிய நாதர்,
விரிதமிழ்க் கலைமணங் கமழும்
ஆரமா முனிவர், அகத்தியர் போல
அருளினர் அரியநன் நூல்கள், [னுங்
சாரமாந் தேம்பா வணியினைத் தொடி
தமிழ்மணங் கமழுமேன் கரமே
ஈரமா நெஞ்சில் இடப்பெற நட்டால்;
இன்பமாய் மலருமேன் வாழ்வே.

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 28-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-45 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அவ்வமயம் 9 சகோதரர், சகோதரிகள் நிலையந்தஸ்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஆனிமாதம் பரிபூரண பலன்கள் அடையக்கூடிய நாட்கள் பின்வருமாறு: 1, 2, 3, 6, 13 (2), 17, 20 (2), 24, 25, 29. பொதுப்பாவ மன்னிப்புக்குரிய நாட்கள்: 6, 13, 17, 25, 29.

A. S. FRANCIS OF MARY
for Director

---

**GOVT. TENDERS**
**Mannar Kachcheri**

N 1240—Tenders for the purchase of the exclusive privilege of selling toddy by retail in the toddy taverns in the Mannar Dist. during the period 1-7-54 to 30-6-55 close-at 9 a. m. on 31-5-54. For particulars see Part 1—Section II, Govt. Gazette, 21-5-54.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அருமையான பிள்ளைகளே !

சென்றவாரம் விடுத்த திருமுகத்திலே தமது ரோமைப் பயணத்தைப் பற்றி எமது மேற்றிராணி யாண்டவர் சொல்லியிருந்தார் அல்லவா? அதிலே தமக்காகச் செபிக்கும் படியும் அவர் கேட்டிருக்கிறார். அதை எப்படிச் செய்யலாம்?

இம்மாதம் 22-ந் திகதி நமது மேற்றிராணி யாண்டவர் மேற்றிராணித்துவ அபிஷேகம் செய்யப் பெற்ற வருடாந்த தினம். அத்துடன் இன்னும் ஒரு விசேஷம் உண்டு. அடுத்த ஆடி மாதம் 7-ந் திகதி அவர் குருத்துவ அபிஷேகம் செய்யப் பெற்று இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவாகின்றன. அதை வெண் பொன் அல்லது வெள்ளி யூபிலி என்று சொல்லுகிறோம்.

இந்தவேளை எமது சந்தோஷத்தைத் தெரிவித்து அக மகிழ எமது மேற்றிராணி யாண்டவர் எம்முடன் இல்லை. இல்லா விட்டாலும் எமது சந்தோஷத்தை அவருக்குத் தெரிவிப்பதும், கடந்த 25 ஆண்டுகளாகச் சர்வேசுரன் அவருக்கு அருளிய ஞான வரங்களுக்கும், அவரால் ஏற்பட்ட நன்மைகளுக்குமாக நன்றி செலுத்துவதும் எமது கடமை அன்றோ!

செபத்தினால் மாத்திரமே இந்தக் கடமையைச் செம்மையாய் நிறைவேற்ற முடியும். ஆகையால், பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் இந்தக் கிழமை தொடக்கம் ஆடி மாதம் 7-ந் திகதி வரையிலும் உள்ள நாட்களில் எமது மேற்றிராணி யாண்டவருடைய கருத்துகளுக்காக விசேஷவிதமாய்ச் செபியுங்கள். திவ்விய பூசை காணுங்கள். சற்பிரசாதம் உட்கொள்ளுங்கள். செபமாலை செபியுங்கள். சிலுவைப்பாதை முயற்சி அனுசரியுங்கள். சிறு தபக் கிருத்தியங்கள் செய்யுங்கள்.

எமது மேற்றிராணி யாண்டவர் பாடசாலைப் பிள்ளைகளாகிய உங்கள் மட்டிலே எடுத்துக் கொள்ளும் மிகுந்த கரிசனைக்கு நன்றி காட்ட இதுவே வழியாகும். இவைகளை எல்லாம் சேர்த்து ஒரு ஞானப் பூச்செண்டு ஆக்கி எமது நேய ஆயருக்குக் கொடுப்போம். இதை அவர் மிகவும் உவப்புடன் ஏற்றுக் கொள்வார்.

தேவன் உங்களை ஆசீர்வதித்துக் காப்பாற்றுவாராக.

17-5-54
யாழ்ப்பாணம்

H. லெக்குத்தூர், O.M.I.
மேற்றிராசன பரிபாலனர்.

குறிப்பு: இந்தக் கடிதத்தை விளங்கப் படுத்தி, ஞானப் பூச்செண்டைத் தயாரித்து ஒவ்வொரு கிழமையும் மேல்வரும் முகவரிக்கு அனுப்பும் படி தலைமை ஆசிரியர்கள் பரிவாய் வேண்டப் படுகிறார்கள்.

முகவரி: அண்ணா,
மேற்றிராணியார் இல்லம்,
யாழ்ப்பாணம்.

## சம்மனசுகள் செய்த உதவி

ஜோண் ஒரு பெரிய தனவந்தர். அவருக்குச் சொந்தமாக வயல் நிலங்கள் அதிகம் இருந்தன. பெருந் தொகையான ஊழியர் அதிகாலை தொடங்கி அவரது கமத்தில் நல்ல வேலை செய்து கொண்டு வந்தனர். இந்த ஊழியரில் இசிதோர் என்பவரும் ஒருவர். இவர் சிறந்த பக்திமான். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து கோவிலுக்குப் போய் அன்று தினம் தான் செய்யப் போகும் வேலைகளைத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து விட்டு வேலைத் தலத்துக்குச் செல்வார். சில வேளைகளில் கோவிலிலே அதிகநேரம் செபத்தில் செலவழிப்பார். அதனால் வேலைக்குப் பிந்திப்போகவேண்டி நேரிடும்.

இதை அவதானித்த மற்ற வேலைகாரர் இசிதோரைக் கேலி பண்ணுவது உண்டு. ஒருநாள் ஒருவன் எசமானிடம் போய்: "இசிதோர் எப்போதும் வேலைக்குப் பிந்தி வருகிறார்" என்று முறைப்பாடு சொன்னான். "நல்லது, நான் இசிதோரைச் சந்தித்துக் கதைப்பேன்" என்றார் ஜோண்.

அடுத்த நாள் காலை ஜோண் கமத்துக்குப் போனார். வேலையாட்களைக் கவனித்தார். மற்றவர்களிலும் பார்க்க இசிதோர் பிந்தி வருவதைக் கண்டார்.

"இசிதோர்! வேலை செய்ய வேண்டிய நேரத்தில் செபம் செய்துகொண்டு இருப்பது நல்லதா?" என்றார் எசமான்.

"ஐயா! செபத்தில் செலவிடும் நேரம் வீண் நேரம் அல்ல; செபஞ் செய்கிறவர்களுடை[illegible] அவர்களுக்காக வேலை செய்கிறார்" என்று மறுமொழி கொடுத்தார் இசிதோர்.

இதன் கருத்தை எசமான் விளங்கவில்லை. "நான் இவனைக் கவனிப்பேன்; நல்லாய் வேலை செய்யா விட்டால் ஆளை வேலையால் நீக்கி விடுவேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு அடுத்த நாள் காலையும் வயலுக்குப் போய் ஒளித்து நின்று இசிதோரைக் கவனித்தார். முதல் நாளிற் போலவே அன்றும் அவர் பிந்தி வந்தார். வழமை போல் எருதுகளைக் கலப்பையில் பூட்டி வயலை உழ ஆரம்பித்தார். தேவ சங்கீதம் பாடிக் கொண்டே வேலை செய்தார். சடுதியாக எசமான் கண்டது என்ன? இசிதோருக்குப் பக்கத்தில் வெண்பனி போன்ற இரு வெள்ளை எருதுகள் தோன்றின. அவற்றின் பக்கத்தில் இரு சம்மனசுகளும் காணப்பட்டனர். இசிதோருடன் சேர்ந்து சம்மனசுகளும் தங்கள் எருதுகளுடன் அவருடைய வேலையை முடிப்பதைக் கண்டார்.

உடனே எசமான் இசிதோரின் பாதத்தில் முழந்தாள் இட்டார். அன்று இசிதோர் சொன்ன வார்த்தையின் கருத்தை இன்று தெளிவாக அறிந்தார். "இசிதோர்! உன் சீவிய காலம் முழுவதும் என் வயலிலேயே நீ வேலை செய்ய வேண்டும்; எனக்காகவும் மன்றாடு; உன்னுடன் சேர்ந்து வேலை செய்யும் மற்ற ஊழியருக்காகவும் மன்றாடிக் கொள்" என்றார் எசமான்.

இன்று இசிதோர் மோட்சத்தில் அர்ச்சியசிஷ்டராய் இருக்கிறார். கமக்காரரின் பாதுகாவலர் என அழைக்கப் படுகிறார். வைகாசிமாதம் 15-ந் திகதி திருச்சபை இவருடைய திருநாளைக் கொண்டாடுகிறது.

— M. J. M.

## கிறீஸ்துவின் பேரால்

அடுத்த ஞாயிற்றுக்கிழமைச் சுவிசேஷத்தில், தாம் சீஷர்களை விட்டுப் பிரிந்தபின் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று யேசு சொல்லுகிறார்.

அவர்கள் மன்றாடும்படி கேட்கிறார் பிதாவாகிய சருவேசுரனின் உதவியைத்தேட வேண்டும்; "என் பெயரால் பிதாவிடம் என்னத்தைக் கேட்டாலும் அவர் தருவார்" என்று யேசு சொன்னார்.

தாம் பிதாவிட மிருந்து வந்தபடியால் சீக்கிரம் அவரிடம் திரும்பிப் போகவேண்டும் என்றார்.

அதாவது யேசு மனிதரை இரட்சிக்க இந்தப் பூலோகத்துக்கு வந்தார். இன்னுஞ் சில நாட்களுள் அவர் திரும்பவும் மோட்சத்துக்குப் போய்விடுவார். இதுதான் ஆண்டவர் ஆகாச கமனமாய் மோட்சஞ் சென்றது.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## கண்டு பிடியுங்கள்

### 9 எழுத்துக்களால் ஆகிய ஒரு பெயர்

1-ம் எழுத்து — ஒலுமடுவில் உண்டு, கருங்காலியில் இல்லை.

2-ம் எழுத்து — கருங்காலியில் உண்டு, ஒலுமடுவில் இல்லை.

3-ம் எழுத்து — தாவடியில் உண்டு, மாசாரில் இல்லை.

4-ம் எழுத்து — மாசாரில் உண்டு, தாவடியில் இல்லை.

5-ம் எழுத்து— குடத்தனையில் உண்டு, மணற்காட்டில் இல்லை.

6-ம் எழுத்து — மணற்காட்டில் உண்டு, குடத்தனையில் இல்லை.

7-ம் எழுத்து — வதிரியில் உண்டு, கலட்டியில் இல்லை.

8-ம் எழுத்து — கலட்டியில் உண்டு, வதிரியில் இல்லை.

9-ம் எழுத்து— ஆகாயத்தில் உண்டு, [illegible] இல்லை.



## காலை விடிந்தது

'ஜெயம்'

1

காலை விடிந்தது
கமலம் விரிந்தது
நீலக்கண் பூத்திடு—பாப்பா
நித்தனைக் கும்பிடுபாப்பா

2

பாழிருள் சென்றது
பாலொளி வந்தது
நீள் துயில் நீக்கிடு—பாப்பா
நிமலனைக் கும்பிடுபாப்பா

3

காகமும், சேவலும்
கைதட்டிக் கூவின
மேகம் மினுங்குது—பாப்பா
மேலோனைக் கும்பிடுபாப்பா

4

சோலையிற் பூக்களும்
சூழ்ந்து மலர்ந்தன
ஆலயம் சென்றிடு—பாப்பா
அமலனைக் கும்பிடுபாப்பா

## நீதிமானான அரசன்

முன்னொரு காலம் "கொன்ஸ்ரன்ரின் நோபிள்" என்னும் ஒரு நாடு இருந்தது. அது இப்பொழுது "ஸ்ரான்புள்" என்னும் பெயரால் அறியப் படுகின்றது. அதனை ஓர் அரசன் ஆட்சி செய்து வந்தான். அவன் ஓர் நீதிமான். எவர் என்ன குற்றம் செய்தாலும் அவர்களை நீதிப்படி தண்டிப்பான். அவன் நாடு பலவளங்களும் பெற்றுச் சிறப்புற்று விளங்கியது. அவ்வாறாக, ஓர்நாள் குடியானவர்கள் சிலர் அரசனிடம் சென்று, அரசாங்க உத்தியோகஸ்தர்சிலர் மக்களிடம் கைக்கூலி வாங்குவதாக முறையீடுசெய்தனர். இதைக் கேட்ட அரசன் மந்திரிபிரதானிகளுடன் தீர்க்கஆலோசனை செய்தபின் அவர்களைப் பார்த்து: "நீங்கள்சென்று எவராவது கைக்கூலி வாங்கக் கண்டால் தகுந்த சாட்சிகளுடன் ஆளை என்னிடம் கொண்டுவந்து ஒப்படையுங்கள்; நான் அவர்களை முற்றவெளி நடுமைதானத்தில்விட்டு மக்கள் குழாம் சூழ்ந்து நிற்கக் கற்றூணில் கட்டிச் சிலகசையடிகள் கொடுக்கச் செய்வேன்" எனக்கூறி அவர்களை அனுப்பி வைத்தான். பின்னர் அதை எல்லோரும் அறிய நாடு முழுவதும் பிரசித்தம் செய்வித்தான்.

சிலதினங்கள் கழிந்தபின் ஓர்சிலகுடியானவர்கள் அரசனின் சமுகஞ்சென்று அவனுடைய அன்னை கைக்கூலி வாங்கியதாகத் தகுந்த சாட்சிகளுடன் ஒப்பனை செய்தார்கள். அரசன் ஓர் நீதிமானாக இருந்த படியால் உடனே தனது அன்னைஎன்றும்பாராது அவளை முற்றவெளி நடு மைதானத்துக்கு அழைத்துச்சென்று சனங்கள் புடைசூழ்ந்து நிற்க, அவளை ஓர் கற்றூணுடன் சேர்த்துக்கட்டிக் கசையடிகள் கொடுக்கச்சேவகருக்குக் கட்டளை கொடுத்தான். அதனால் வேந்தனின் அன்னை கற்றூணுடன் பிணைக்கப்பட்டாள். பின்னர் சேவகர் அடிக்கத் தொடங்க, அரசனே தனது முதுகைக் கொடுத்து அன்னைக்காக அந்த அடிகளை எல்லாம் வாங்கத் தொடங்கினான். அரசன் அடிகளை வாங்குவதைக்கண்ட சேவகர் பயந்து அடிப்பதை நிறுத்தினர். ஆனால், அவனே குறித்த அடிகளை அடித்து முடிக்கும்படி கட்டளையிட்டான். அதனால் அரசனின் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டன. இதைக் கண்ட பிரசைகள் எல்லாம் கண்ணீர் உகுத்தனர். அதுமுதல் கைக்கூலி வாங்கும் கெட்டவழக்கம்

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காட்டில் முற்றாக அற்றுப்போய் விட்டது. ஏனெனில், கைக்கூலிவாங்கினோர் தங்கள் தவறை உணர்ந்து, "நீதிமானான அரசனைத் துன்புறுத்தி விட்டோமே" என்று வருத்தப் பட்டனர். வேந்தனின் அன்னையே அதிகம் துக்கப் பட்டாள்.

இந்த அரசனைப்போலவே நீதிபரனாகிய யேசுபெருமானும் உலகில் உள்ள சகலருக்காகவும் முற்றவெளி நடுமைதானத்திலே கற்றூணில் கட்டி அடிக்கப் பட்டார். ஆனால், அரசன் அடிவாங்கியதைக் கண்டு அக்காட்டு மக்கள் எல்லாம் திருந்தினர். ஆனால், எம்பெருமான் பட்ட வேதனையை நினையாமல் பாவிகளான நாம் திரும்பத் திரும்பப் பாவஞ்செய்கிறோம். இதுதான் நாம் அவருக்குச் செய்யும் பிரதிஉபகாரமா? ஆதலால் நாம் இனிமேல் ஆண்டவர் பட்ட கசைஅடிகளை நினைந்து நல்வழிப் படுவோமாக!

இராசசிங்கம் டோறஸ்
சந்தியோகுமையோர் தெரு,
யாழ்ப்பாணம்.

ரகலதிணகுர்வலிஒ

எஸ். சவிரிமுத்து,
தம்பனை.

## பிசினி கொளுத்திய திரி

பிறிட்ஸ் என்னும் கிழவனை நேசித்தவர் எவருமே கிடையாது. முதலாவது, அவன் ஓர் பிசினி. இரண்டாவது அவன் ஓர் மூடன். அவனை அணுக யாரும் யோசிப்பர். தான் வாங்கின நிலத்தில் அகப்பட்ட பொருளால் அவன் எல்லையற்ற பணம் சம்பாதித்தான். ஏழை எளியவர்க்குக் கொடுக்க மாட்டான். தொழிலாளருடன் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள மாட்டான். வருடம் ஒருமுறை திவ்விய நன்மை பெறுவான். கிறீஸ்துநாதரோ, அவரது மந்தையின் தேவைகளோ அவனுடைய கல்நெஞ்சை ஊடுருவ முடியவில்லை.

சிறுவயதிலிருந்து அவன் அனுஷ்டித்து வந்த ஒரு வழக்கத்தை மாத்திரம் அவன் கைவிடவில்லை. சனிக்கிழமை தோறும் இரவில் அவன் தேவதாய்க்குத் தோத்திரமாக ஒருமெழுகுதிரி கொளுத்தி, ஓர் பிரியதத்த மந்திரம் சொல்வான். பணம் சேர்ப்பதில் அவன் மூழ்கி நின்ற போதிலும் இந்தவழக்கத்தை அவன் மறந்ததில்லை. அவன் தெய்வமாகக் கருதிய அவனுடைய தாய், கடவுளின் மாதாவை வழிபடுவதால் ஏற்படும் நன்மைகளை அவனுக்கு எடுத்துரைத் திருந்தாள். இந்தச் சிறு செய்கையை அவன் வாரந்தோறும் செய்தது, கடவுளுடைய தாயின்மேல் இருந்த பத்தியால்அல்ல. ஆனால், தன் தாய்மேல் இருந்தநேசமே இதைச்செய்ய அவனைத் தூண்டிற்று. அவள் இறந்து நாற்பது ஆண்டுகள் ஆகியும் அவன் அதை மறக்கவில்லை. தன் வேலைக்காருடன் வசித்த பெரிய வீட்டின் புத்தக சாலையில் அவன் மெழுகு திரியை எரிப்பான். அதைக் கொளுத்தி வைக்கையில் பிரியதத்த மந்திரத்தைச் சொல்வான்.

மழைகாலம் வந்தது. அந்த வருடத்தில் கொடிய குளிர், மழை. புகைப் போக்கி உடைந் திருக்கிறது; அதைப் பழுது பார்க்க வேண்டும் என அவனுடைய சமையற்காரன் பிறிட்ஸிக்கு ஒன்று இரண்டு முறை ஞாபகப் படுத்தினான். கிழவனுக்குப் பணம் செலவழிக்க மனம் வரவில்லை. அதனால் புகைப்போக்கியை அவன் பழுது பார்க்கவில்லை.

கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின சனிக்கிழமையன்று கடும் புயல் வீசியது. குளிரைத் தாங்க முடியவில்லை. நெருப்பு எரித்தால் பணம் செலவாகுமே எனப்பயந்த பிறிட்ஸ் நேரத்துடன் நித்திரைக்குச்சென்றான். அன்று சனிக்கிழமை ஆயிற்றே; மெழுகுதிரி கொளுத்தவில்லையே என்பது படுத்தபின்னரே அவன் நினைவுக்கு வந்தது. எழும்பச் சோம்பலாய் இருந்தது. சோம்பலை எதிர்த்துச் சில நிமிஷமாகப் போராடினான். சீவியகால வழக்கத்தைக் கைவிட மனமில்லை. வெறுப்புடன் முணுமுணுத்துக் கொண்டு, புத்தக சாலைக்குப் போய், மெழுகுதிரியைக் கொளுத்தி வைத்தான். அப்பொழுது வடகாற்று அகோரமாய் அடித்தது. பிரியதத்த மந்திரத்தைச் சொல்கையில் ஏதோ இடிந்து விழுந்த இரைச்சல் கேட்டது. வீட்டின் அஸ்திவாரமே அசைந்தாற்போல் இருந்தது. ஏணியில் ஏறினான். காற்று அவனைத் தூக்கிக் கொண்டு போகிறாப்போல் பலமாய் அடித்தது. தனது படுக்கை அறைக்குச் சென்றான். அவன் புத்தகசாலையில் இருக்கையில் புகைப்போக்கி விழுந்து கூரையையும் இடித்துவந்து அவனுடைய படுக்கையில் விழுந் திருந்தது கட்டில் தூள் தூளாகிக் கிடந்தது. மெழுகுதிரி கொளுத்தப் போகா திருந்தால் என்ன நேரிட் டிருக்கும் என்பதையும் நினைத்துப் பார்த்தான். தயாராய் இல்லாத நேரத்தில் நித்தியத்துள் வீசி எறியப் பட்டிருந்தால் தன்கதி என்ன என்பதையும் சிந்தித்தான். உடனே முழந்தாளிட்டுச் சிலுவை அடையாளம் வரைந்து தன் பாவங்களுக்காக உத்தமமனஸ்தாபப் பட்டான். இதுவரை கன்னெஞ்சனாய் இருந்தவன் இப்பொழுது மாறிவிட்டான். நித்திய நரகத்தினின்று அற்புதமாய்க் காப்பாற்றப் பட்ட அவன் தனது பிசினித்தனத்திற்குப் பரிகாரம்செய்து அதுமுதல் ஏழைகளுக்குப் பெரும் உதவிகள் செய்து வந்தான்.

(ஞா. தூ.)

## சிக்கனத்தின் சிறப்பியல்பு

[டக்றர் பிராங்க்ளின்]

பலவழிகளிலும் சம்பாதிக்கத் தெரிந்த ஒருவன் அதேபோலப் பலவழிகளிலும் சேமித்துவைக்கும் முறையை அறியானாயின் எப்போதும் துன்புறுவான். உணவுக்காக அதிகபணம் செலவழிப்பவர்கள் உறுதியான உள்ளத்தை அநேகமாய்ப் பெறுவதில்லை.

நீ நல்ல திடகாத்திரனாய் இருக்கும்போது சம்பாதிக்க எவ்வளவு ஆர்வங் காட்டுவாயோ அவ்வளவு ஆர்வம் சேமித்துவைப்பதிலும் காட்டு. கிழக்கிந்திய தீவுகளால் (தங்கள் வாசனைத் திரவியங்கள் மூலம்) ஸ்பானியதேசத்தைச் செல்வம் கொழிக்கும நாடாக மாற்றஇயலவில்லை ஏனென்றால், ஸ்பானியநாட்டினின்று வெளியேறுபவை, உள்ளே வருவனவற்றைவிட அதிகமாக உள்ளன.

செலவுகளை இழுத்துவைக்கும் கேளிக்கைகளை விட்டுவிடு. அப்படியாயின் குடும்பபாரம், அதிகவரி, இக்கட்டான சமயங்கள் ஆகியவற்றைப்பற்றி முறைப்பட அவசியமாயிராது.

உன்னைப் பிடித்திருக்கும் ஒரு கெட்ட பழக்கத்திற்காக நீ செலவிடும் தொகை, இருமக்களை வளர்க்கப் போதுமானதாயிருக்கும்

ஒருசிறுண்டி, எப்பொழுதாவது கொஞ்சம் அதிகசெலவு, கொஞ்சம் விலையுயர்ந்த உணவு, சற்றேகவர்ச்சிகரமான உடை, அபூர்வமாய்ச் சில கேளிக்கை இவையெல்லாம் அற்பவிஷயங்களென மதிக்காதே; ஆனால் பலதுளி பெருவெள்ளம்என்பதை நினைந்து கொள்.

சிறுசெலவுகளைப்பற்றி எச்சரிக்கையாயிரு. சிறுதுவாரங்கூடப் பெரிய தோர்கப்பலை மூழ்கடிக்க இயலும்! அதிகசெலவை விரும்புபவன் பிச்சைக்காரனாக மாறிவிடுவான். முட்டாட்கள் விருந்துசெய்விக்கின்றனர். ஆனால், அறிஞர்கள் அதைஅருந்துகின்றனர்!

நீங்கள் ஆடம்பரப்பொருட்கள் பலவற்றை [illegible]கள் நல்லவைஎன்று கூறுகின்றீர்கள். ஆனால், தக்கஎச்சரிக்கையுடன் நீங்கள் நடந்துகொள்ளாவிட்டால் அவைகள் தீயனவாக மாறிவிடும். மலிவானவைகள்என்று நினைக்கின்றீர்கள். உண்மையில் அடக்கவிலையிலும் குறைவாக அவைகள் விற்கப்படலாம். ஆனால், அவைகள் உங்களுக்கு அவசியமற்றவையென்றால், உங்களுக்குக் கிட்டாத அபூர்வப்பொருட்களின் பட்டியலில் சேர்த்துவிடுங்கள்.

உனக்கு அவசியமில்லாதவற்றை வாங்கு, வெகுசீக்கிரமே உனது அத்தியாவசிய தேவைப்பொருட்களை நீ விற்பாய்.

## பொதுவர்த்தமானம்

### பஞ்சாங்க திருத்தம்

தற்போது பாவனையில் இருந்துவருகின்ற உலகபஞ்சாங்கம் திருத்தப்படவேண்டுமென்று ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தின் முன்பாகக் கொண்டுவரப்பட்ட ஓர்பிரேரணையை அமெரிக்க ஐக்கியதேசமும், பிரித்தானியும் அங்கீகரிக்க மறுத்துவிட்டன. அவ்விதம் ஓர்திருத்தஞ் செய்யப்படவேண்டுமென்ற பொதுசனகேள்வியே தனது தேசத்தில் இல்லையென்று பிரித்தானியஅரசு கூறியுள்ளது. தனதுதேசத்திலே பல்வேறு கிறீஸ்துவசபைகளும் அதற்குமாறாயிருப்பதாக அமெரிக்கவரசு தெரிவித்துள்ளது. இந்தியா ஆதரித்துள்ள இந்தப்பஞ்சாங்க திருத்தமானது மும்மூன்று மாதங்கள்கொண்ட கால்வருடங்களாக ஓர்வருடத்தைப் பிரிப்பதாகும். ஒவ்வோர் கால்வருடமும் 91 நாட்களைக் கொண்டதாகும். திருத்தப்படும்வருடம் "உலகதினம்" என்று அழைக்கப்படும் சர்வதேச விடுமுறைநாள் ஒன்றையும் கொண்டதாயிருக்கும். இப்புதிய திட்டம்பற்றிக் கத்தோலிக்கதிருச்சபை அதிகாரபூர்வமான அபிப்பிராயம்யாதும் தெரிவிக்கவில்லை. ஆனால், இந்தத்திருத்தமானது பாஸ்குத்திருநாள் திகதியை நிர்ணயிப்பதான பாரம்பரிய முறையை மாற்றுவதாயிருக்கும்.

### சரணடைந்த ரூஷியகப்ரின்

சோவியத்அரசின் விரோதியும், மேற்குஜேர்மனியில் வசித்துவந்தவருமான ஜியோர்ஜி ஒகொலோவிச்எனும் ரூஷியனைக் கொலைசெய்யுமாறு கட்டளையிடப்பட்ட கொக்லோவ்என்ற ரூஷிய இரகசியப்பொலிஸ் கப்ரின் அவ்வாறுசெய்துவருவதாக மேற்கு ஜேர்மனிக்குச்சென்று அங்கே அமெரிக்க பாதுகாப்புஅதிகாரிகளிடம் சரணடைந்துவிட்டார். இவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படாவண்ணம் காத்துவைக்குமாறு இவரை அந்தரங்கமான ஓர்இடத்தில் வைத்திருக்கின்றனர். இவர் அமெரிக்க பாதுகாப்புஅதிகாரிகளிடம் சரணடைந்த சம்பவமானது, ரூஷியாவின் மனிதவேட்டைத் தந்திரங்களில் மிகஅருவருக்கத் தக்கதொன்றை அம்பலப் படுத்தி விட்டிருக்கிறது. ரூஷியாவில் கம்யூனிஸ்த எதிர்ப்புஇயக்கத்தின் தலைவரான ஜியோர்ஜி ஒகொலோவிச் என்பவரைக் கொலைசெய்வதற்குக் கப்ரின் கொக்லோவ் நியமிக்கப்பட்டிருந்தார். இந்தக்கொலைக்குக் கருவியாகக் கொடுக்கப்பட்டிருந்தது ஒருசிறிய சிகறெற்பெட்டியே. இந்தப்பெட்டியைத் திறந்தால் 23 சிகறெற் தலைகள்மட்டும் கண்ணுக்குப் புலப்படும். ஆனால், அதற்குள் ஒருசிறிய சுழல்துப்பாக்கி வைக்கப்பட்டிருந்தது. ஒருவருக்கு நட்புமுறையில் சிகறெட்வழங்குவது போல் பெட்டியைத்திறந்தால், அதிகமானஓசையின்றித் துப்பாக்கிவெடிக்கும். அந்தத்துப்பாக்கிக்குண்டினுள் பொட்டாசியம் சைனேட் என்னும் விஷம் வைக்கப்பட்டுள்ளதால் தாக்குண்டவர்கள் உடனேமாள்வார்கள். கப்ரின்கொக்லோவ் இந்த மரணசிகறெற்பெட்டியுடன் சரணடைந்து ரூஷியாவின் மனிதவேட்டைச் சூழ்ச்சிகளில் மிகஇரகசியமானஒன்றை அம்பலப்படுத்திவிட்டார். கொக்லோவ்சரண்புகுந்தமையானது, ரூஷியாவில் மிகவிரைவாகப் பரவிவரும் கம்யூனிஸ்த எதிர்ப்புஇயக்கத்தையும் உலகறியச் செய்துள்ளது. அவர்கூறியபடி பொதுவுடைமைச் சின்னங்களான சுத்தியலுக்கும், அரிவாளுக்குமபதிலாகப் பொதுவுடைமை எதிர்ப்புஇயக்கத்தாரின் கவட்டைக்கோல்சின்னம் ரூஷியாவின் முக்கிய நகரங்களின் கட்டிடச்சுவர்களிலெல்லாம்காட்சியளிக்கின்றது. ரூஷியர்களே கம்யூனிஸ்தர்களைத் தோற்கடிக்குமநாள் நெருங்கியுள்ளது. ஸ்ராலினின் மரணத்திற்குப்பிறகும், பேறியா சுட்டுக்கொல்லப்பட்டபிறகும் ரூஷியஇரகசிய ஸ்தாபனத்திலும், சோவியத் ரூஷியாவிலும் உண்டானமாறுதல்கள் பற்றிய விபரங்களையும கப்ரின கொக்லோவ் அமெரிக்கஅதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறார். மெக்சிக்கோவில் ரூஷியதலைவர் ட்றொட்ஸ்கி கொலையுண்டதுபற்றிய விபரங்களையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

### மோலற்றோவின் சிறைவாசம்

கோறியாப்பிரச்சினைக்கு ஒருமுடிவு காணவும், இந்தோசீனாவில சமாதானத்திற்கு வழிவகுக்கவுமாகப் 19 நாடுகளின்பிரதிநிதிகள் ஜெனிவாநகரில் மகாநாடு நடத்திக்கொண டிருக்கிறார்கள். இந்தத் தூதுக்குழுக்களில் ஏறக்குறைய 1,000 பேர் இருக்கிறார்கள். ரூஷியா 220 பேரை அனுப்பியுள்ளது. ரூஷியாவின் முதல்துணை மந்திரியும், வெளிநாட்டுமந்திரியுமான மொலற்றோவ்என்பவர் ரூஷியகுழுவின் தலைவர். ஜெனிவாவிலுள்ள மெட்றொப்போல் ஹொட்ரல் முழுவதையும் ரூஷியர்கள் வாடகைக்குஅமர்த்தியுள்ளனர். ஜெனிவாவிலிருந்து இரண்டு மைல்தூரத்திலுள்ள ஒருபங்களாவில் மொலற்றோவ் தங்குகிறார். அந்தப் பங்களாவுக்கு மாதம் வாடகை 6,000 ரூபா. இந்தப் பங்களாவைச்சுற்றி ரூஷியபடைகள் காவல்செய்கின்றன. அத்துடன் மின்சாரக்கம்பிகளால் அமைக்கப்பட்ட ஒருவேலியும் போடப்பட்டுள்ளது. மற்றெந்தநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் இவ்வளவுபாதுகாப்புச் செய்யப்படவில்லை. மொலற்றோவ் காவலாளிகளுக்கும், மின்சாரக் கம்பிகளுக்குமநடுவில் பதுங்கியிருக்க, மற்ற நாட்டுப்பிரதிநிதிகள் சுதந்தரமக்களைப் போல் நடமாடுகின்றனர். இதுதான் கம்யூனிஸ்த ஆட்சிமுறைக்கும, ஏனைய ஆட்சிமுறைகளுக்குமுள்ள வேற்றுமையாகும்.

— பிரான்ஸ்தேசம் ஆயிரத்துக்கு மேற்பட்ட மரியாயின் திருசேத்திரங்களைக் கொண்டிருக்கிறது. இந்தமரியாயின் வருடத்திலே மரியாயின்திருசேத்திரங்களுக்கு யாத்திரைசெய்யுமாறு பரிசுத்தபிதா கேட்டுக்கொண்டதின்பேரிலே யாத்திரிகர்களுக்கு ஓர் வழிகாட்டியாக இந்தத்திருசேத்திரங்களையெல்லாம் அட்டவணைப்படுத்தித் தற்போது ஓர்புத்தகம் அச்சிடப்பட்டிருக்கிறது.

— இங்கிலாந்திலே போக்ஸ்ரோன் நகரில் சமீபத்திலே தமது 58-ம்வயதில் காலஞ்சென்ற மாக்குவெஸ் குயின்ஸ்பறிபரபு மரிக்கஇருமாதங்களின்முன்னரே அத்தேச அப்போஸ்தலிக்க ஸ்தானாபதியின் காரியதரிசியான வண. டேவிட் காஷ்மன்சுவாமியாரால் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்படலாயினர்.

— ஒல்லாந்துதேசத்தின் பதினொரு மாகாணங்களுக்குமான அரசாங்க சபைத்தேர்தல் சமீபத்தில்நடந்து அதில் கத்தோலிக்ககட்சியே தொழிற்கட்சியிலும் அதிகப்படியாக ஐந்துஸ்தானங்களைப்பெற்று வெற்றியடைந்திருக்கிறது. கத்தோலிக்ககட்சிக்கு 186 ஸ்தானங்களும், தொழிற்கட்சிக்கு 181 ஸ்தானங்களும் கிடைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகக்கோட்டை

# அர்ச். அந்தோனியார்

## புராதன ஆலயத்திருநாள் அறிக்கை

**இவ்வருடம் அர்ச். அந்தோனியார் திருநாள்**
**ஆனி மாதம் 13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும்**

### திருநாள் அட்டவணை

1. முதலாம் திகதி துவக்கம் 11-ம் திகதி வரை தினமும் மாலை 7 மணிக்கு நவநாள் ஆராதனை நடைபெறும். நவநாள் நடத்தப் பிரியமுள்ளோர் ரூ. 10/- கொடுத்து இவ்வாராதனையில் பங்குபெற்றுக் கொள்ளலாம்.
2. 12-ம் திகதிசனிக்கிழமை மாலை 7 மணிக்கு (“போன்றிபிக்கல் வேஸ்பெர்ஸ்”) மாலைஆராதனை நடத்தப்படும்.
3. 13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6, 7, 8 மணிக்குச் சாதாரண பூசைகளும், 9 மணிக்குப் பாடற்பூசையும் நடத்தப்படும். பின் அற்புதமுள்ள அர்ச். அந்தோனியார் சுரூபச் சுற்றுப்பிரகாரம் நடைபெறும்.

### முக்கியகவனிப்பு (யாத்ரிகர்களுக்கு)

பிரயாணம் :- யாத்திரிகர்களின் நலனைக்கருதி, புகைவண்டி நிலையத்தோடு சம்பந்தப்பட்ட மோட்டார்ப் போக்குவரத்துவசதி இத்திருநாட் காலங்களில் மாத்தளைக்கும் வாகக்கோட்டைக்கு மிடையே நிறுவப்படும். வாகக்கோட்டைக்குப் போக றெயில்பிரயாண டிக்கற்றுக்கள் எல்லா ஸ்ரேஷன்களிலும் பெற்றுக் கொள்ளலாம். தங்கள் சொந்த வாகனங்களில் பிரயாணஞ்செய்வோருக்கு, தம்வாகனங்களை நிறுத்த இடவசதி அளிக்கப்படும்.

உணவு :- திருநாட்காலத்தில் கோவிலுக்கு அருகில் சிலஹொட்டல்கள் திறக்கப்படும். உணவைத்தாங்களே சமைக்க விரும்புகிறவர்களுக்கும் வசதிகள்உண்டு. (விரும்புவாருக்கெல்லாம் சனிக்கிழமைசாயந்தரம் இலவசஉணவுவழங்கப்படும்.)

தங்குமிடம் :- திருயாத்திரிகர்களின் விடுதி எல்லோருக்கும் இலவசமாகத் திறந்துவிடப்படும். தனியாக விடுதிவேண்டுவோர், ரூ. 10/- வாடகைசெலுத்தி, தற்சமயத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் வாடகைவீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம். வீடு வேண்டியவர்கள் மே மாதம் 30-ந் திகதிக்குமுன் கட்டளைக் குருவானவருக்கு அறிவிக்கவும்.

பாதுகாப்பு :- சிலதடவைகளில் திருட்டு நடந்திருப்பதால், திருயாத்திரிகள் தங்கள் பணத்தைப்பங்குக் குருவானவரிடம் செலுத்தி, தங்களுக்கு அவசியமான போது திருப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

### வாகக்கோட்டை

இலங்கைத்தீவிலே வாகக்கோட்டை மிகப்பிரத்திபெற்ற திருயாத்திரை ஸ்தலங்களில் ஒன்று. இதுஇலங்கையிலே அர்ச். அந்தோனியாரின் மிகப்பழைய ஓர் சுரூபத்தைக் கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான திருயாத்திரிகர்கள், புதுமைவள்ளலான அர்ச். அந்தோனியாரின் சுரூபத்தின்முன்பு செபிப்பதற்காகவும், அவரிடமிருந்து தாங்கள் அடைந்துள்ள எண்ணிறந்த உதவிகளுக்கு நன்றி செலுத்துவதற்காகவும், இங்குவந்து கூடுகிறார்கள். காணமற்போன பொருட்கள் கிடைக்கின்றன. வேலையில்லாதவர்களுக்கு வேலைகிடைக்கிறது. வியாதிக்காரர்கள் குணமடைகிறார்கள்.

பங்குக் குருவானவர்
**D. SEBASTIAN, O. S. B.**




# இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனால் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறான். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனைப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறான். ஏதாவது அபாயம் நேருவதானால், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறான். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

## சிலோன் இன்ஷூரன்ஸ்

**கம்பெனி லிமிட்டெட்,**

தலைமை ஆபீஸ் :

**69, இராணி வீதி — கொழும்பு.**

Ceylon Iusurance Co. Ltd., 69, Queen St., Colombo


### புத்தக மதிப்புரை

## “ஏசுக்கிறீஸ்து மஸ்கோவிலோ?”

தமிழாக்கம் : F. தஸ்நேவிஸ் பர்நாந்து, B. A. அவர்கள்.

பதிப்பு : அசிசி அச்சகம், நாகர் கோவில்.

விலை : 3 அணா.

கம்யூனிஸ்ற்என்று சொல்லப்படுகின்ற பொதுவுடைமைக்காரர்களின் கொள்கைகளையும், அவர்களது நடைமுறைகளையும், உள்ளதைஉள்ளவாறு அறிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் இரத்தினச்சுருக்கமாக எழுதப்பட்டுள்ள ஒருசிறுகைந்நூல் இது.

“மாஸ்கோவில் ஏசுநாதர்” என்ற மகுடநாமத்துடன் ‘நவயுகம்’ ஆசிரியர் தோழர் கே. தாமோதரன் எழுதிய அபத்தம்நிறைந்த நூலுக்கு மறுப்புரையாகிய சவுக்கடிகொடுக்கும் நோக்கமாக எழுதப்பட்ட இந்நூலில் கடவுள்இல்லை — கடவுள்இருந்தால் அவருடன்போர்செய்து அவரைவெல்லுதல் — மதங்களுடன் போர்புரிதல் — சதி, அழிவுவேலை, தந்திரம், பொய், புரட்டு, குதர்க்கம் இவைகளைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு செய்தல்முதலிய கொள்கைகளை உலகின்பலபாகங்களிலும் வெளிவந்த பொதுவுடைமைவாதிகளின் பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியவற்றில்இருந்து எடுத்துக் காட்டித் தோழர்தாமோதரத்தின் அறியாமைக்கு இதிலேவருத்தம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்பேசும் கத்தோலிக்கமக்கள் பொதுவுடைமைக் கட்சிக்காரரின் கொள்கைகளையும், வேலைத்திட்டங்களையும் நன்கு விளங்கிக்கொள்ளக் கூடிய சிறந்த வகையில் இந்நூலை எழுதிவெளியிட்ட ஆசிரியர் F. தஸ்நேவிஸ் பர்னாந்து, B. A. அவர்களுக்கு கத்தோலிக்கமக்கள்சார்பாக எமதுநன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். எமக்குஅனுப்பியபிரதிக்காக எமதுமனமார்ந்தநன்றி உரித்தாகுக.

### புத்தக மதிப்புரை

## கம்யூனிஸத்தின் கொள்கை

(இரண்டாம் பதிப்பு)

ஆக்கியோர் : மறைத்திரு. ஆர்க்கேஞ்சல், O. C. D. அவர்களும், திரு. J. தஸ்நேவிஸ் பர்னாந்து, B. A. அவர்களும்.

பிரசுரம் : அசிசி அச்சகம்; நாகர்கோயில்.

விலை : 0—4—0

கம்யூனிஸம் என்ற போர்வையிலே நாஸ்திகம் பரவிவருகிறது. அக்கொள்கை பலாத்காரமான முறையிலே பரப்பப்பட்டு வருகிறது. பாமரமக்களிடையே அது பரவிவருகிறது. கம்யூனிஸத்தைப்பற்றி இன்னும் மக்கள் சரியாக அறிந்து கொள்ளவில்லை. அதன் தத்துவத்திலுள்ள அபத்தங்களை மக்கள்பூரணமாய் அறிந்திருப்பார்களானால் நமதுநாட்டிலே அக்கொள்கை தலைகாட்டியிருக்கவே மாட்டாது.

பயங்கரம்நிரம்பிய இச்சூழ்நிலையிலே “கம்யூனிஸத்தின்கொள்கை” என்ற இந்நூல் இரண்டாம்பதிப்பாக வெளிவருவது வரவேற்கத் தக்கதாகும். கம்யூனிஸத்தின் கொள்கைகளையும், அதன் தப்பறைகளையும்பற்றித் தக்க மேற்கோள்களுடன் இதிலே விளக்கப்பட்டுள்ளது.

‘கிறீஸ்தவம் போதிப்பதும் கம்யூனிஸமே’ என்ற கம்யூனிஸ்தர்களின் நஞ்சுகலந்த பிரசாரத்திற்குத் தக்க பதில் இதுகூறுகின்றது. எளியவர்களின்தோழர் கத்தோலிக்கமேயன்றிக் கம்யூனிஸமன்றென்பதைக் காட்டிநிற்கின்றது. ‘மதம் மனிதனைமயக்கும் அபின்’ என்பதை மறுத்து, ‘மார்க்ஸீயமே மனிதனைமயக்கும் அபின்’ என்று நிரூபித்துநிற்கிறது. செஞ்சீனாவிலும், ரூஷியாவிலும் நடைபெற்றுவரும் அட்டூழியங்களையெல்லாம் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துகின்றது. ‘தனிமனிதன் பொதுஉடைமைக்காகப் பலியிடப்பட வேண்டியவன்’ என்ற கம்யூனிஸத்தின் தத்துவம் தகர்த்தெறியப் படுகிறது.

கம்யூனிஸம் கிறீஸ்துவத்தின்சத்துராதி. நூலின் அட்டைப்படமே இதனை விளக்கிநிற்கிறது. இரும்புத்திரை நாடுகளிலே கிறீஸ்தவர்கள் அனுபவிக்கும் துயரம் சொல்லுந்தரத்ததன்று. அவை பற்றிய விபரங்களும் இந்நூலிலே காட்டப்பட்டுள்ளன. எனவே, இந்நூல் ஒவ்வொருகிறீஸ்தவனும் அகத்தியமாகப் படிக்கவேண்டியதாகும். அவர்களின் துயரவாழ்க்கை நமக்கு நல்லஎச்சரிக்கை தருவதாகும். வருமுன்காப்பது சுலபமல்லவா?

நமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகிறோம்.

✝

யோசேவ் போல் அவர்களின்
4-ம் வருட
**மரணஞாபகம்**

இறப்பு :
**25—5—1950**

இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு இரந்துநிற்கும்

மனைவி-மக்கள்

### நன்றியறிந்த தோத்திரம்

பரிசுத்த திருக்குடும்பத்தின் உதவியினாலும், விசேஷமாய் அர்ச். பாத்திமா மாதாவின் அனுக்கிரகத்தினாலும் நான் கேட்டுக்கொண்ட சலுகைகள் அனுகூலமாயின. இன்னும் நான் நினைத்திருக்கும் நற்காரியங்களையும் தமது திருக்குமாரனிடத்திலிருந்து பெற்றுத்தந்தருளுவாராக. அர்ச். பாத்திமா நாயகியின் நாமம் எங்கும் புகழப்படுவதாக.

தோ இ. இராசையா
மாதகல்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 20-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org